2 மாணவிகள் கைது; 'சேகுவேரா' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்?

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 218
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 1 றஜபு 15 வியாழக்கிழமை (17-9-70)

நவநாகரீக நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
R. C. பில்டிங்,
50, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'
உரிமையாளர்: க. கிருபாகரன்
இரத்தினம் ஆபரண மாளிகை
உரிமையாளர் (காலஞ்சென்ற)
திரு. K. V. கனகரத்தினம் J. P.
அவர்களின் மருமகன்

பவிதயா வரைபடமும் கண்டுபிடிப்பு

கொழும்பு,புதன்

'சேகுவேரா' இயக்கத்தினர் எனச சந்தேகிக்கப்படும் இரு இளம்பெண்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். பதவியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் பதவியா நகரைக் குறிக்கும் வரைபடமும், பொலிஸ்நிலைய வரைபடமும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்திலுள்ள மகாவித்தியாலயமொன்றில் கல்விகற்கும் இவ்விருஇளம் பெண்களும் சகோதரிகள் என விசாரணையில் தெரிய வந்தது. ஒருவருக்கு17 வயமற்றவருக்கு 14 வயது

வீட்டிலிருந்த தமது இரு புதல்விகளை திடீரெனக் காணவில்லை என்றும் அவர்களைக் கண்டுபிடித்து தரும்படியும் அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு தாய் பொலிசில் புகார் தெரிவித்திருந்தார் இதைத் தொடர்ந்து இவர்களைப் பதவியாவில் வைத்துப் பொலிசார் கைது செய்தனர், கைதுசெய்யப்பட்ட இளம்பெண்கள் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்ததைத் தொடர்ந்து அவர்களது தாயார் பதவியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவ்விருஇளம் பெண்களும் தமது புதல்விகள் என அவர் பொலிசாரிடம் தெரிவித்தார்.

கைதானவர்களிடம்கண்டுபிடிக்கப்பட்ட வரைபடங்கள் சேகுவேரா இயக்கத்தினரால் வழங்கப்பட்டதென கருதப்படுகிறது, விசேஷ இரகசிய பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

1971 மார்ச் 2ல் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் பிரகடனம்

கண்டி ஓடியன் மண்டபத்தில் நடாத்த விசேஷ ஏற்பாடு

கொழும்பு,புதன்

புதிய அரசியல் அமைப்புச சட்டம் 1971-ம் ஆண்டு மார்ச மாதம் 2-ம் திகதி பிரகடனப்படுத்தப்படும். இத்தகவலை சட்ட விவகாரஅமைசர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று அறிவித்தார்.

இலங்கை நாட்டை குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்துவதற்கு முன்னோடியாக அமைந்த இந்த அரசியல் அமைப்பு சட்ட விபரம் முதன்முதலாக அன்றைய தினம் வெளியிடப்படும்.

இலங்கை அரசியலில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தவிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டப்பிரகடனக் கூட்டம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி ஓடியன் மண்டபத்தில் அடுத்த வருடம் மார்ச் மாதம் 2-ந் திகதி நடைபெறும்.

இந்திய கோவில் நிலங்களை எடுக்க வேண்டுமாம்

பிரதமருக்கு மகஜர்

படுத்தித்துறை, புதன்

'இந்தியக் கோவில்களுக்கென இங்கு இருக்கும் நிலங்களை அரசாங்கம் எடுத்து நாட்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். இந்நிலங்கள் பல ஆண்டுகளாக இந்தியக் கோவில்களுக்கு எவ்வித வருமானமும் கொடுக்காது தனிப்பட்டவர்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்துவந்துள்ளன. இந்நிலங்கள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆவன செய்ய வேண்டும்'

என்பாறு கரவெட்டி மேற்கு ஐக்கிய வாலிபர் முன்னணி பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயகாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அத்துளுத் தண்ணீர்த் திட்டத்தைத் திறந்து வைப்பதற்கு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவை அனுப்புமாறும் இம்மகஜர் கூறியுள்ளது.

இந்தியக் கோவில்களுக்கான நிலங்களை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்னும் தீர்மானமொன்று நெல்லியடிப் பட்டினசபைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சேகுவேரா இயக்கத்தினர் கூட்டும் பத்திரிகையாளர் மகாநாடு

சேகுவேரா இயக்கத்தினர் இம்மாதம் 20ந்திகதிமாநாடு ஒன்றைக் கூட்டுகின்றனர் 'ஜனதா விமுக்தி பெரமுனே' என்ற சேகுவேரா இயக்கத்தினரின் கொள்கைகள்பற்றி நாட்டில் தப்பான அபிப்பிராயம் நிலவுவதாகவும் அதுபற்றிநாட்டு மக்களுக்கு பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கம் கொடுக்கப்படும்என்றும் இதைஒழுங்கு செய்துள்ள அமைப்பாளர் திரு ஒஸ்மண் டி சில்வா கூறியுள்ளார்.

பொரளையில் இம்மாதம் 20ந் திகதி பத்திரிகையாளர் மாநாடு நடைபெறும்.

லண்டனில் தேயிலை விலை வீழ்ச்சி

கொழும்பு, புதன்

லண்டனில் இலங்கைத் தேயிலையின் விற்பனவு வீழ்ச்சி அடைந்துள்ளது. இலங்கைத் தேயிலை, லண்டன் மார்க்கட்டில் நிராகரிக்ப்படுவதனாலேயே விலை வீழ்ச்சியடைந்துள்ளதெனக் கூறப்படுகிறது

கல்வியமைச்சின்

உயர்பதவிகள் ஆசிரியர்களுக்கு கிடைக்கும்

கோட்டை, புதன்

கல்வி அமைச்சிலுள்ள உயர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும்பொழுது வழமையாகச் செய்வது போல் எதிர்காலத்தில் கல்விப் பரிசோதகர்களுக்கு இடமளிக்கப்படாது.

கல்வி மா அதிகாரிகள், கல்விப் பரிசோதகர்கள் மற்றும் கல்விச் சேவைக்கான நிர்வாக அதிகாரிகள் யாவரும் இனிமேல் ஆசிரியர்கள் மத்தியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார்கள்.

பதியுதீன் மாஹ்மூத், ஆசிரிய சேவையையும், கல்வி நிர்வாக சேவையையும் இணைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பாடசாலை நிர்வாகம் பற்றிய அனுபவமோ, அறிவோ இல்லாத, கல்வி அமைச்சு அதிகாரிகளால் பாடசாலை விவகாரங்கள் திருப்திகரமாகத் தீர்த்துவைக்கமுடியாது என அமைச்சர் நினைத்தே ஆசிரியர்களைக் கல்வி அமைச்சு நிர்வாகசேவையில் புகுத்தவுள்ளாரென தெரிய

தென்னிலங்கை தமிழ் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆவன செய்ய வேண்டும்'

[illegible]வாறு கரவெட்டி மேற்கு ஐக்கிய வாலிபர் எடுக்கவேண்டு மென்னும் தீர்மானமொன்று நெல்லியடிப் பட்டினசபைக் கூட்டத்திலும் விவாதிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

தென்னிலங்கை தமிழ் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்

தமிழ் காங்கிரஸ் வற்புறுத்தும்

நல்லூர், புதன்

,,தென்னிலங்கையிலுள்ள தமிழ் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு விகிதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.''

இவ்வாறு அகிலஇலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி அரசியல் அமைப்பு நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்க விருக்கும் மகஜரில் வற்புறுத்தியுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் தயாரித்துள்ள மகஜரில் பின்வரும் அம்சங்கள் வற்புறுத்தப்பட்டுள்ளன.

■ நீதிபரிபாலனத் துறையில் சட்டசபை தலையிடக் கூடாது.

■ அரசாங்கசேவைக் கமிஷன், நீதிபரிபாலனத்துறை என்பன சுதந்திரமாக இயங்கவேண்டும்.

■ இலங்கையில் எந்தப் பகுதியிலுள்ளவராயினும் நீதிமன்றத்தில் தாய்மொழி மூலமே விசாரணை செய்யப்படவேண்டும்.

■ பிள்ளைகளின் போதனா மொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டும்.

■ சிறுபான்மையோருடைய நலனைப்பாதுகாக்கும் வகையில் மேல்சபையொன்று இயங்கவேண்டும்.

■ குடியரசுத் தலைவர் பொதுமக்களாலேயே தெரிவுசெய்யப்படவேண்டும். குடியரசுத்தலைவர் பெரும்பான்மை இனத்தவராக இருந்தால் உதவித் தலைவர் சிறுபான்மை இனத்தவராக இருக்கவேண்டும்.

■ கல்வி, சமயம் ஆகிய துறைகளிலும் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு வேண்டும்.

'போதிய ஆசிரியரின்றி மாணவர்கள் பாதிப்பு'

கல்வி மந்திரிக்கு மகஜர்

அம்பன், புதன்

பச்சிலைப்பள்ளி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அமைந்திருக்கும் மகாவித்தியாலயங்களின் போதிய உதவி ஆசிரியர்களின்றியும், ரூமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைகளில். சிலவற்றில் தலைமை ஆசிரியர்களின்றியும் சில அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் ஒரேஒரு ஆசிரியருடனேயே இயங்கி வருகின்றன. இப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பிற இடங்களிலுள்ள ஆசிரியர்கள் கடமையாற்ற வருவதற்குக் கஷ்டப்படுகின்றனர். அவ்வாறு வந்தாலும் குறுகிய கால எல்லைக்குள்ளேயே மாற்றமெடுத்து இப்பகுதியை விட்டே சென்றுவிடுகின்றனர். இத்தகைய பிரச்னைகளால் இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விநிலை புனரமைப்புச் செய்யப்படவேண்டுமானால் மாவட்டசேவைத் திட்டத்தின் கீழ் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படும்பொழுது இப்பகுதிகளில் கல்விகற்று வேலையற்றிருக்கும் தராதரமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்துத் தெரிவு செய்யப்படுவதுடன் இவர்களை இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலேயே சேவையிலீடுபடச் செய்யவேண்டும் என கேட்கும் மகஜரை கீழைக்கரை அபிவிருத்தி முன்னணிச் செயலாளர் கல்வி அமைச்சருக்கும், படுத்தித் துறை எம். பி. திரு க. துரைரத்தினத்திற்கும், கிளிநொச்சி எம். பி. வி. ஆனந்த சங்கரிக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

'தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்காது'

— வி. நவரத்தினம்

நல்லூர், புதன்

'யாழ்ப்பாணத்தில் தமிழ் பிரமுகர்கள் அரச அமைப்புச் சபை சம்பந்தமாக உருவாக்கியுள்ள பத்துத் தீர்மானங்களும்! வெறும் வார்த்தை ஜாலங்களேயன்றி தமிழ் மக்களுக்கு அது எவ்விதப் பலனையோ பாதுகாப்பையே அளிக்காது' என்று தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் முன்னாள் ஊர்காவற்றுறை எம். பியுமான திரு வி. நவரத்தினம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ் நகர மண்டபத்தில் தமிழ்ப் பிரமுகர்களால் கூட்டப்பட்ட அரசியல் சாஸன மகாநாட்டிலிருந்து தாம் வெளிநடப்பு செய்தது குறித்தும் இவ்வறிக்கையில் அவர் விளக்கம் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

மகாநாட்டுக்கு அழைப்பு வந்ததால் அதனை கௌரவிக்க வேண்டுமென்ற நோக்குடன் சென்றேன். ஆனால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பத்துத் தீர்மானங்களைத் தவிர வேறு விஷயங்கள் குறித்துப் பேசக்கூடாதென்று அங்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் நான் கூட்டத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது'

தமிழ் மகாநாட்டில் பிரமுகர்கள் நிறைவேற்றியுள்ள 10 தீர்மானங்களும் எதிர்காலத்தில் தமிழர்களை பெருத்த அபாயத்துக்கு இட்டுச் செல்லக்கூடியது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

'தமிழர்கள் அரசு அமைப்புச்சபையுடன் எவ்விதமான தொடர்பும் தமிழ் மக்கள் வைத்துக்கொள்வது விரும்பத்தக்கது அன்று; தமிழ் பேசும் மக்கள் இச் சபையைப் புறக்கணிப்பதுதான் சரியான வழி.

எமது விடுதலைக்காக நாமே உழைக்க வேண்டும். அதுவே எமக்கு பாதுகாப்பு அளிக்கும்.

இலங்கை- இந்திய பாரம்பரிய உறவுக்கு ஆபத்து வராது!

புதுடில்லி, செப். 16

'இலங்கை — இந்திய நட்புறவுக்கு தற்போதைய சிறு பூசல்களும் பிணக்குகளும் ஒருபோதும் குறுக்கே வர இயலாது. இலங்கையில் உள்ள இந்தியர் குடியுரிமைப் பிரச்னை சிறிமாவோ — சாஸ்திரி ஒப்பந்தமூலம் நல்ல முறையில் தீர்த்து வைக்கப்படும்.

தற்போது புதுடில்லியில் இருக்கும் இலங்கை வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் புதுடில்லியில் தனக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்புபசாரத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது.

'இந்தியர் குடியுரிமை ஒரு பொழுதும் பாதிக்கப்படாது. சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் பூரணமாகச் செயல்படும். நான் இங்கு வந்ததன் நோக்கம் பாரதத்தின் வீடமைப்புத் திட்டங்களைக் கவனித்து எனது நாட்டின் வீட்டுப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கேயாகும். பாரதத்தில் போன்றே இலங்கையினது வீட்டுப்பிரச்னையும் உள்ளது பாரதத்தின் பல பகுதிகளிலும் குறைந்த செலவில் நல்ல வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதை நான் பார்வையிட்டுள்ளேன். அவற்றிலெல்லாம் இங்குள்ள கட்டிட ஆராய்ச்சியாளர்களின் நற்பணி வெளிப்படையாகத் தெரிகிறது.'

குறைந்த செலவில் வீடமைப்பது குறித்து ஆராய வீடமைப்பு அமைச்சர் பீற்றர் கெனமன் தலைமையில் ஒரு குழு பாரதத்தின் பல இடங்களுக்கும் விஜயம் செய்கிறது.

'அரசாங்கத்தை எதிர்த்து உரிமைகளைப்பெற முடியாது'

வரவேற்பு விழாவில் கிளிநொச்சி எம். பி.

திருநெல்வேலி, புதன்

அரசியல் நிர்ணயசபை மகஜர்கப்பட் போகின்றத்நேரதில் சிறுபான்மையினரது உரிமைகள் சிலவற்றை கேட்கக்கூடிய நேரத்தில் ஆட்சிமன்றத்தில் நமது தலைவர் இருந்திருந்தால் தமிழரின் உரிமைகளை வாதாடி பெற்றுக் கொடுத்திருப்பார்'

நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தமிழ்க்காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் திரு. வீ ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'இந்த நாட்டில் வாழும் சகல தமிழ்மக்களையும் சகல உரிமைகளுடன் வாழ வவப்படதே எமது இலட்சியம்; குறிக்கோள். அதை விடுத்து தனியாட்சி அமைப்பது இந்த நாட்டிற்கு உகந்ததா? அப்படி அமைப்பதானால் இன்று இந்த நாட்டின் பொருளாதாரப் பொடுளான தேயிலை தெங்கு, ரப்பர் போன்றவிர்கள் பெரும்பாலும் சிங்களப் பிரதேசங்களில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைதான் எமது நாட்டிற்கு பணவருவாயைத் தேடிக்கொடுக்கின்றன. அவற்றை விடுத்து தனியாட்சி எமது பிரதேசத்தில் எப்படி நடாத்த முடியும்

இன்று ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம்போல் இனி என்றுமே ஏற்பட முடியாது. அதுதான் அரசியல் நிர்ணய சபை அமைப்பது. இதனை அமைப்பவர்களோ பெரும்பான்மையான அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு அரசாங்கத்தை அமைத்திருப்பவர்கள். எனவே அரசாங்கத்தை எதிர்த்து ஒருபோதும் எமது உரிமைகளை பெறமுடியாது. எனவே நேசக்கரம் நீட்டி நியாயத்தை எடுத்துக்கூறினால் சிங்கள மக்கள் கட்டாயம் உரிமைகளைத் தருவார்கள். பலவந்தமாக ஒருபோதும் உரிமைகளைப் பெறமுடியாது.

உங்களைச் சிங்களம் படியாதீர்கள் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் சிங்களம் படிக்காததால் வேலையிழந்த ஊழியர்களுக்கு ஒரு வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அன்று சிங்களம் படிக்காததால் வேலையிழந்தவர்கள் பலர் அன்று சிங்களம் படித்திருந்தால் இன்று அவர்கள் வேலையிழந்திருக்க மாட்டார்கள் அப்படி வேலையிழந்தவர்கள் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து சம்பந்தப்பட்ட மந்திரியை நேரில் பேட்டிகண்டால் அவர்களின் குறையைத் தீர்ப்பதாக மந்திரி எமக்குக் கூறியுள்ளார்.

நல்லூர் எம். பி திரு சி. அருளம்பலம் பேசுகையில் கூறியதாவது; என்னை ஆதரித்தவர்களுக்கும் எதிர்த்தவர்களுக்கும் என்னால் செய்யக்கூடிய உதவிகளை நிச்சயம் செய்வேன். இன்னும் சில மாதங்களில் எனது தொகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டமொன்றையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன்.

அவரைத் தொடர்ந்து வழக்கறிஞர் திரு. ஆ. தனபாலசிங்கம், முதலியார் முத்துத்தம்பி, திரு. எஸ். திரவியம், திரு. யெ. காசிப்பிள்ளை, திரு. ஏ. சோமாஸ்கந்தர் ஆகியோரும் சொற்பெருக்காற்றினார்கள்.

நிர்வாக சேவைப் பரீட்சை முறையில் மாற்றம்?

கொழும்பு, புதன்

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சில மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது.

பல்கலைக்கழகத்தில் தோன்றிய 6 பாடங்களிலும் கட்டுரை, சுருக்கம், பொது அறிவு ஆகியனவற்றிலும் நடைபெற்றுவரும் பரீட்சை முறையை மாற்றியமைக்க நிர்வாகசபை திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

பல்கலைக்கழகப் பாடங்களில் பரீட்சை நடத்தாமல், ஏனைய பாடங்கள் 3ல் மட்டும் இனிமேல் பரீட்சையை நடாத்தி நிர்வாக சேவை அதிகாரிகள் தெரிவு செய்யப்படவிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

ரணவீரா இலங்கை வந்தார்

கொழும்பு, புதன்

எதியோப்பியா அரசாங்கத்தால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பத்திரிகையாளரான நேற்று முன்தினம் கொழும்பு வந்துசேர்ந்தார்'

பத்திரிகை ஒன்றில் எதியோப்பிய நாட்டைக் கண்டித்துக் கட்டுரை எழுதினாரென்ற குற்றச்சாட்டின் மீது தடுத்துநிறுத்திவைக்கப்பட்டிருந்த இவர் பிரதமர் ஸ்ரீமாவின் தலையீட்டில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

திரு. ரணவீரா, பதில் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவை இன்று சந்தித்தார். எதியோப்பியாவில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் புத்தகமாக வெளியிடும் யோசனை தமக்கிருப்பதாக திரு. ரணவீரா கூறினார்.

ஆஸ்திரேலியா சென்றனர்

கோட்டை, புதன்

ஆட்சிமன்ற சபாநாயகர் திரு ஸ்ரான்லி திலகரத்தினா தலைமையில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றுஇன்று அவுஸ்திரேலியா செல்கிறது.

இக்குழு அவுஸ்திரேலியா - கன்பேராவில் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற கொமன்வெல்த் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வதற்காக செல்கின்றனர். இம்மாநாடு 10 நாட்களுக்கு நடைபெறும். டாக்டர் என் எம் பெரேராவும் இம்மாநாட்டில் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது

கல்வி மா அதிகாரிகள், கல்விப் பரிசோதகர்கள் மற்றும் கல்விச் சேவைக்கான நிர்வாக அதிகாரிகள் யாவரும் இனிமேல் ஆசிரியர்கள் மத்தியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார்கள்.

கல்வி அமைச்சர் அல்ஹாஜ் இல்லாத, கல்வி அமைச்சு அதிகாரிகளால் பாடசாலை விவகாரங்கள் திருப்திகரமாகத் தீர்த்துவைக்கமுடியாது என அமைச்சர் நினைத்தே ஆசிரியர்களைக் கல்வி அமைச்சு நிர்வாகசேவையில் புகுத்தவுள்ளாரென தெரியவருகிறது.

பிரான்ஸில் சிங்களம் கற்பிக்கப்படும்

பாரிஸ், செப். 16

பிரான்ஸ் பல்கலைக்கழகங்களில் சிங்களம் படிப்பிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் நேற்றுக் கைச்சாத்தான ஒப்பந்தத்தில் இலங்கையில் பிரான்ஸ் மொழியும், பிரான்ஸில் சிங்களமும் கற்பிக்க இணக்கம் தெரிவித்து பிரதமர் ஸ்ரீமாவும், பிரான்ஸ் வெளிநாட்டமைச்சரும் இன்று கைச்சாத்திட்டனர்.

RECEPTION TO HON'BLE SENATOR C KUMARASOORIYAR, MINISTER OF POSTS & TELECOMMUNICATION

திகதி: 29-9-70

இடம்: சுழிபுரம் விக்டோறியா கல்லூரி.

நேரம்: பி. ப. 3—6 மணிக்கு பகிரங்கக்கூட்டம்.

இராப்போசன விருந்து: பி ப. 8 மணி.

விபரங்களுக்கு தயவுசெய்து வை. இராசசுந்தரம் கௌரவ காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும்.

சுழிபுரம். V. இராசசுந்தரம்.

2454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல்

சிகிச்சை நிலையம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் டாக்டர் சண்முகரதினம் அவர்களுடைய வைத்திய சாலையில் டாக்டராகக் கடமையாற்றிய யான், 356-ம் இலக்கம் காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம் (நாவலர்சந்திக்கு அருகாமையில்) என்ற முகவரியில் எனது சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்துள்ளேன்.

அன்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் (மிஸ்),
N. T. நாகலிங்கம்,
(Mrs. N.T.M.F. செவியர்)
2456

வரி விளம்பரம்

விற்பனைக்கு

காணி:

காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு அண்மையில் சுமார் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடுகளும் பயிர்களுமுண்டு. பிரித்துத் துண்டுகளாகவும் பெறலாம். ஆசிநாதன், காங்கேசன்துறை. 2196

தளபாடங்கள்:

வியாபார ஸ்தலங்களுக்கு ஏற்ற அலுமாரி ருக்கை சோக்கேஸ் கவுண்டர்கள் டீப்லேட்களும் விட்டுப் பாவனைக்கு ஏற்ற மேசைகள் கதிரைகள், மணிக்கூடு, மின்சாரவிசிறி, இரும்புப்பெட்டி முதலியன குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். காலை 9 மணி முதல் 6 மணி வரை. இலக்கம் 48-50 கிருன்பசார், யாழ்ப்பாணம். தொலைபேசி: 610.

2951

கல்வி

சித்தி நிச்சயம்! இப்பொழுது பின் வரும் பாடங்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பகல்/மாலை வகுப்புக்கள் ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம் ஜீ. சி. ஈ. (உயர்தரம்) கலை, சிறுப்பர் பரீட்சை, விசேட ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து, எணக்கியல், வர்த்தகம் ஆண் பெண் இரு பாலாருக்கும் தனித்தனி விடுதி வசதிகள் உண்டு. யூனைடெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 3046

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பதவி வெற்றிடம்

தற்காலிக நாட்சம்பள லொறிச்சாரதிகளாக பதிவு செய்தல்

மேற்படி பதவிகளுக்கு லொறி/பஸ் ஓட்டுவதிலும் அதனைப் பாவனை செய்வதிலும் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள அத்தாட்சிப்பத்திரங்கள் பெற்ற சாரதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அபேட்சகர்கள் தமது பெயர், முகவரி, தராதரம், அனுபவம், பிறந்த திகதி ஆகிய விபரங்களைத் தெரிவித்து பதிவு அஞ்சல் மூலமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளர் என முகவரியிட்டு தமது விண்ணப்பங்களை 18-9-1970ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும் வண்ணம் அனுப்புதல் வேண்டும்.

வேதனம்:- உள்ளூராட்சி சேவை அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தற்காலிக நாட்சம்பள லொறிச்சாரதிகளுக்கான வேதனம் வழங்கப்படும்.

குறிப்பு:- விண்ணப்பதாரர் குறுகிய கால அறிவித்தலில் நியமனங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.

(ஏ. ரி. சுந்தரம்),
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13-9-1970. 2455

இவர்களும் கொண்டாடுவர்!

சரவணை, புதன்

புளியங்கூடல் லங்கா சமசமாஜக்கட்சியினர் இம்மாதம் 26-ம் திகதி பண்டாரநாயகா தினத்தை கொண்டாடவுள்ளனர். புளியங்கூடல் சந்தியில் நடைபெறும் இவ்விழாவில் தெஹியோவிற்ற ஆட்சி மன்ற உறுப்பினர் தனபால வீரசேகராவும்கலந்துகொள்வார் என அறியப்படுகிறது.

ராணி ஜெமினி — சௌகார் ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — ஜெயந்தி

கோப்பாய், மாமெமோறியல் கழகங்களுக்கு பெரும் வெற்றிகள்

கூடைப்பந்தாட்டத்துக்குதினமும் கட்டுக்கடங்காத ரசிகர் கூட்டம்

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

யாழ்ப்பாணம், வியா. யாழ். பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு 'ஈழநாடு' நடாத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு போட்டிகளிலும், எதிர்பாராத விதமாக பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டி தோற்கடிக்கப்பட்டது.

மாமெமோறியல் வெற்றி

மாமெமோறியல் விளையாட்டுக் கழகத்திற்கும், பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடைபெற்ற கடும் போட்டியில் பற்றிசியன் கோஷ்டி ஈற்றில் தோல்வியடந்தது.

முதல்நாள் போட்டியில் கோப்பாய் விளையாட்டுக் கழகக் கோஷ்டியிடம் 46-8 புள்ளிகள் வித்தியாசத்தால் தோல்வியடைந்த மாமெமோறியல் கழகம், பலம் கொண்ட பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை இரண்டாம் நாள் தோற்கடித்தது, கூடைப்பந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் பரபரப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. இதனால் அன்று மாலை நடைபெற்ற ஆட்டங்களைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல், கூடைப்பந்தாட்டத் திடலில் கூடினர்.

மேற்படி இருகோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற போட்டியின் போது இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் புள்ளிகளைப் பெற்ற போதிலும், மாமெமோறியல் கோஷ்டியினரே புள்ளிகளைப் பெறுவதில் முன்னணியில் திகழ்ந்தார்கள்.

மாமெமோறியல் கோஷ்டியில், தற்போது இலங்கை கூடைப்பந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் பலர் விளையாடியதினால் இக் கோஷ்டியினரின் விளையாட்டு பார்ப்பதற்கு மிகவும் ரசிப்பாக இருந்தது.

ஆட்டமுடிவில் மாமெமோறியல் கழகத்தினர், பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை 43—35 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்

இப்போட்டிக்கு திருவாளர்கள் தனபாலசிங்கமும், நவராசாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

மாமெமோறியல் கோஷ்டியினருக்கும், சென்றலைய்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியினருக்குமிடையில், மாலை நடைபெற்ற போட்டியில் யாமெமோரியல் கோஷ்டியினர் மிக இலகுவாக வெற்றி பெற்றனர்.

இந்தப் போட்டியின்ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மாமொமோறியல் கோஷ்டியினர் புள்ளிகளை அடுத்தடுத்து பெற்றவண்ணமே இருந்தனர். ஆனால் இந்தப் போட்டியில்தான், சென்றலைய்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியினர் கடந்த போட்டிகளைக் காட்டிலும் உற்சாகமாக விளையாடி கூடிய புள்ளிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆட்டமுடிவில் மாமெமோறியல் கோஷ்டியினர் 90—44 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் கியூ. ஸி. யோச்சும், தனபாலசிங்கமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்கள்.

கோப்பாய் விளையாட்டுக் கழகத்தினருக்கும், பற்றிசியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியினருக்குமிடையில், மாலை நடைபெற்ற மற்றுமொரு ரசிப்பான போட்டியில் கோப்பாய் கழகத்தினர் வெற்றி பெற்றனர்.

இப் போட்டியின் ஆரம்பத்தில் பற்றிசியன் கோஷ்டியினரே முதலில் புள்ளிகளைப் பெற்றனர். இதையடுத்துத்தான் கோப்பாய் கோஷ்டியினர் புள்ளிகளை அடுத்தடுத்து பெறத் தொடங்கினர். இடைவேளையின் போது கோப்பாய் கழகத்தினரே 15-8 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் நின்றனர்.

இடைவேளையின் பின்ஆட்டம் மிக உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆட்டம் முடிவடையும் வரை யார் வெற்றி பெறுவார்கள் என நிச்சயப்படுத்தி கூற முடியாத அளவுக்கு இரு கோஷ்டி வீரர்களும் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்றவண்ணமே இருந்தனர்.

இந்த ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை கோப்பாய் கோஷ்டியினரே கூடிய புள்ளிகளைப் பெற்று இறுதி வரை முன்னணியில் நின்றார்கள். இக் கோஷ்டியின் வீரர்களான நவராசாவும், தேவராஜேந்திராவும் கூடையை நோக்கி பந்தை வீசுவதில் சிறந்து விழங்கினர்கள். இந்த இரு வீரர்களின் சிறப்பான ஆட்டம் பல தடவை ரசிகர்களின் மத்தியில் பலத்த கரவொலியை உண்டாக்கியது.

பற்றிசியன் கோஷ்டியினர் வேகமாக பந்தை முன்னுக்குக் கொண்டு சென்றபோதிலும் கூடையினுள் பந்தை போடவிடாது கோப்பாய் கோஷ்டியினர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் 'விக்டறி', இராணுவக் கோஷ்டிகள்

பற்றிக்ஸ் மைதானத்தில் இன்று இரு மோதல்கள்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணத்துக்கு தற்போது விஜயம் செய்திருக்கும், இலங்கையில் மிகப் பலம் கொண்ட விளையாட்டுக் கழகமான விக்டறி கோஷ்டி, இன்று சென் பற்றிக்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் மோதுகின்றது.

இந்தப்போட்டியில் மோதுவதற்காக, சென். பற்றிக்ஸ் வீரர்கள் கடந்த சில நாட்களாக இலங்கையில் பிரசித்தி பெற்ற உதைபந்தாட்டப் பயிற்சியாளரான திரு அல்பேட் பெர்ஞண்டோவிடம் கடும் பயிற்சி பெற்றிருக்கின்றனர். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கோஷ்டியின் தற்போதைய வீரர்களுடன், உதைபந்தாட்டத்தில் இலங்கையின் பலப்பாகங்களிலும் சிறந்து விளங்கும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலரும் சேர்ந்து விக்டறிக் கழகத்தை எதிர்த்து விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி இரு கோஷ்டிகளின் விளையாட்டுப் போட்டிக்குமுன், இராணுவத் தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணத்தலைவர்தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் ஓர் உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவிருக்கின்றது. இலங்கைராணுவத் தெரிவுக் கோஷ்டியில் பல இலங்கை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி வீரர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத் தலைவர் தெரிவுக் கோஷ்டிக்கு வீரர் எம். தேவதாஸ் தலைமை தாங்குகின்றார்.

இந்த இரு போட்டிகளும் மாலை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (தே. நி)

'கலைஞர்களுக்கு பொறுமை சுயநலம் இருக்கக் கூடாது'

பொன் விழாவில் கலையரசு

மானிப்பாய், திங்கள்

"சில தென்னிந்தியத் திரைப்பட நடிகர்களைப் போற்றுவதில் இங்குள்ள ரசிகர் கோஷ்டிகள் தமக்குள் போட்டி போட்டுக்கொள்கின்றன. புதுப்படங்கள் திரையிடப்படும்போது தண்ணீர்ப்பந்தல்களும் போடுகிறார்கள். ஆனால் இங்குள்ள தமிழ் நடிகர்கள் தென்னிந்திய நடிகர்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை இக்கோஷ்டியினர் உணராதிருப்பது பெரிய குறையாகும்."

இவ்வாறு கலையரசு சொர்ணலிங்கம் கூறினார். அவர் திருமணம் புரிந்த ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பல கலைஞர்கள் ஒன்றுகூடி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் எடுத்த இவ் விழாவிற்கு முதலியார் முத்துத் தம்பி தலைமைவகித்தார். வளர்ச்சியில் ஆர்வங் கொண்டு, முன்னின்றுஉழைக்கவேண்டும்.

முதலியார் சி. முத்துத் தம்பி தனது தலைமையுரையில், கலைவாழ்வுடன் சிறந்த இல்லற வாழ்வு வாழ்ந்த உயர்ந்த மனிதர் கலையரசு என்றும் அவர்களால் இலங்கையில் தமிழ் நாடகம் தலையெடுத்து மதிப்பைப்பெற்றது என்றும் கூறினார். இங்குள்ள நாடகக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்துஅவரின் பெயரில் ஒரு நாடகப்பயிற்சி நிறுவனத்தை நிறுவி நாடகக் கலையை வளர்த்துவரவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில், நாடகத்துறையில் கலையரசு கடைப்பிடித்த ஒழுங்கு, ஒழுக்கம் குருபக்தி ஆகியவையே அவரை இந்நிலைக்கு உயர்த்தியது என்றார்.

திருவாளர்கள் எஸ். ரி

இன்றைய பலன்

புரட்டாதி மாதம்1ம் திகதி (17-9-70)

மேஷம்- குழந்தைஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம் ஆணவப் போக்கினால் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிக்க நேரிடலாம்.

ரிஷபம்- புத்திரர்களாலும் மதிப்பு உயருவதற்கு இடம் உண்டு, சுமுகமான தினம்.

மிதுனம்- பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித் தரலாம். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

கடகம்-விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறககும்.

சிம்மம்- குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும், சுற்றுடலிலும் வேண்டியதை சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெறும்.

கன்னி- சூழ்ச்சியின் உச்சக் கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில்கண் வைப்பீர்கள்.

துலாம்- தெய்வநம்பிக்கை மேலாங்கி நிற்கும். பிரேருக்கு ஆத்மீக விடயங்களில்அதிக ஆர்வம் ஏற்படலாம்.

விருட்சிகம்- எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம். நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

தனுசு- காதல்கணைநாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள் பாலுணர்ச்சி மேலிடும்.

மகரம்- தற்பெருமைக்காகத் தவறுனபாதையில் காலடி எடுத்து வைக்கநேரிடலாம். தொழில் துறையிலும் தயக்க நிலைதென்படும்.

கும்பம்- எந்த விடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும். நாவடக்கம் மிகவும் விரும்பத்தக்கது.

மீனம்- பிரிந்தவர்கள் மீண்டும்வாழ்க்கையில் இணைவர். தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிருவாகக் [illegible] அங்கத்தவருள் ஒருவராக [illegible] வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் [illegible]

ரணி ஜெமினி — சௌகார் ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த

இரு கோடுகள்

யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன், ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த

பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6 30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .

ஸ்ரீ விநாயகா சுப்பீரியா கம்பைன்ஸ்

துலாபாரம்

(தமிழ்)
★ ஏ. வி. எம். ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

...ுக்கும் தனித்தனி வீடுகள் வசதிகள் உண்டு. யூனைடெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 3046

தெஹிவளையிற்ற ஆட்சி மன்ற உறுப்பினர் தனபால வீரசேகராவும்கலந்துகொள்வார் என அறியப்படுகிறது.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பிரேம்நசீர் - ஷீலா - சாரதா
நடித்த
துலாபாரம்
(மலையாளம்)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர் — ஈ. வி. சரோஜா
நடித்த
என் தங்கை

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி — ஜமுனா
நடித்த
மருதநாட்டுவீரன்

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
THE PSYCHOPATH
(Scope color)
(Strictly for Adults)

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Max Von Sydow
Yvette Mimieux
in
THE REWARD

...ியாழன் 17—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ. காலை 6-15 நாதாஸ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ. பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ. மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-25 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 வீணை, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நெயர்விருப்பம்.

...ட்டிகளைக் காட்டிலும் உற்சாகக விளையாடி கூடிய புள்ளிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆட்டமுடிவில் மாமொமோறியல் கோஷ்டியினர் 90—44 புள்ளிகள் வித்தியாசத்தால் எதிர்க் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

இப் போட்டிக்கு திருவாளர்கள் தனபாலசிங்கமும், விஜயரட்னமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

கோப்பாய் வெற்றி

நேற்று முன்தினம் காலை, கோப்பாய் விளையாட்டுக் கழகத்திற்கும், சென்றலெய்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் கோப்பாய் கழகத்தினர் 38—22 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்.

...மத்தியில் பலத்த கரவொலியை உண்டாக்கியது.

பற்றிசியன் கோஷ்டியினர் வேகமாக பந்தை முன்னேக்கிக் கொண்டு சென்றபோதிலும் கூடையினுள் பந்தை போடவிடாது கோப்பாய் கோஷ்டியினர் ...ாக சாமார்த்திய வழிகளாக கையாண்டு தடுத்தவண்ணமே இருந்தனர். இதனால் பற்றிசியன் வீரர்கள் பல தடவை மிகதூரத்தில் நின்று பந்தை கூடையினுள் போட்டு ரசிகர்களின் 'சபாஷை' அடிக்கடிப் பெற்றனர்.

இந்த ஆட்ட முடிவில் கோப்பாய் கோஷ்டியினர் 33—30 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்.

உதை பந்தாட்டம்

பற்றிக்ஸ் கோஷ்டியிடம் மன்னார் தோல்வி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், மன்னார் சென். சேவியர் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரு பிரிவுகளிலும் வெற்றிபெற்றது.

மேற்படி இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளிடையே முதலில் நடைபெற்ற போட்டி பார்ப்பதற்கு ரசிப்பாக இருந்தது ஆனால் கோல்கள் போடுவதில் சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் இடைவேளையின்போது 3-0 கோல்களைப் பெற்றிருந்தார்கள் இக்கோல்களை பத்மராசா, செல்வராசா, அரியநாயகம் ஆகிய வீரர்கள் முறையே போட்டார்கள்

இடைவேளையின் பின்னும் சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் மேலும் இரு கோல்களைப் போட்டனர். இக் கோல்கள் இரண்டையும் வீரர் ஏ. மதுரநாயகம் மின்னல் வேகத்தில் போட்டார். ஆட்ட இறுதியில் சென். பற்றிக்ஸ் கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இதன் பின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை சென். பற்றிக்ஸ் கோஷ்டியினரே கோல்களைப் போட்டவண்ணம் இருந்தனர்

சென் பற்றிக்ஸ் கோஷ்டியினர் முதல் கோலை 'பெனல்டி' மூலம் பெற்றனர் இடைவேளையின் போது இக்கோஷ்டி 2-0 கோல்களைப் பெற்றிருந்தது

ஆட்ட இறுதியின்போது சென். பற்றிக்ஸ் 5-0 கோல்களைப் பெற்றிருந்தது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் காப்பின் சொன்ஸலஸ் மூன்று கோல்களை மிகசாதுரியமாகப் போட்டார். எல். ஆர் எஸ். யோசப்பும், மதுரநாயகமும் கோல்களைப் போட்டனர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

.....

வடபகுதி வரும் அமைச்சர்கள்

பருத்தித்துறை, வியா, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கிளைகளின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற் கலந்து கொள்வதற்காக அமைச்சர்கள் திரு கே. பி. இரத்னக்கா திரு. செ. குமாரசூரியர் ஆகியோர் இம்மாத இறுதியில் இங்கு வரவிருக்கின்றனர்.

...பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பல கலைஞர்கள் ஒன்றுகூடி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் எடுத்த இவ்விழாவிற்கு முதலியார் முத்துத்தம்பி தலைமைவகித்தார். மறுமலர்ச்சி மன்றத்திலிருந்து கலையரசு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

கலையரசு மேலும் பேசுகையில் கூறியதாவது: எனக்கு நாடகம் நடிக்கும் பைத்தியம், என் மனைவிக்கு நாடகம் பார்க்கும் பைத்தியம். அதனால்தான் நாடகக் கலையை நான் வளர்க்கவும் அதனால் உயர்ச்சிபெறவும் முடிந்தது, நாடகக் கலைஞர்களிடையே சுயநலமும், பொறாமையும் இருக்கக் கூடாது.

இங்கு நாடககலை கீழ்நிலை அடைந்துகொண்டு போகிறதே என்று நீண்ட நாட்களாகக் கவலைப்பட்டு வந்தேன். ஆனால் இப்போது சில பாடசாலைகளும் சில நாடக மன்றங்களும் ஒழுங்கும் ஒழுக்கமும் நிறைந்த தரமான நாடகங்களைமேடையேற்றி வருவதைப்பார்த்து மகிழ்ச்சியடைகின்றேன். நாடகத்துறையில் இத்தகைய விழிப்பு இங்கு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் இங்குள்ள சிறந்த நாடகக் கலைஞர்கள் ஒன்றுகூடி, ஒரு திறனத்தை நிறுவி நாடகக் கலையை வளர்க்கவேண்டும் குறிப்பாக பணவசதியுடையவர்கள் நாடகக்கலை...ம் பேசுகையில், நாடகத்துறையில் கலையரசு கடைப்பிடித்த ஒழுங்கு. ஒழுக்கம் குடும்பக்தி ஆகியவையே அவரை இந்நிலைக்கு உயர்த்தியது என்றார்.

திருவாளர்கள் எஸ். ரி சாரி, திரைப்பட, நாடக நடிகர் ஏ. ரகுநாதன் ஆகியோரும் பேசினர் டிங்கிரி சிவகுரு கோஷ்டியினரின்கலை...

விளையாட்டு விழா

கிளிநொச்சி, வியாழன்

கடந்த செவ்வாயன்று கிளிநொச்சிப் பொலிஸ் பகுதியினரால் நடாத்தப்பட்ட விளையாட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது இதில் பொலிசாரின் பலவித நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து விளைஞ உடைப்போட்டி நடைபெற்றது

இவ்விளைஞ உடைப் போட்டியில் கிளிநொச்சி விற்பனை இலாகாவினரின் "பிரேத ஊர்வலம்" காட்சி முதலாம் இடத்தைப்பெற்றது.

நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிருவாகக் ...அங்கத்தவருள் ஒருவராக வட்டுக் கோட்டையைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். (கு. வி. ம.)

நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஊரெழு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்
தேவை: உதவி முகாமையாளர்

1. வயது:- 25—40 வரை.
2. கல்வித்தராதரம்:- க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் கூட்டுறவுப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருத்தல்வேண்டும்.
3. பிணைப்பணம்:- ரொக்கம் 2000/- ஆதனப் பிணை 3000/- ஆதனம் இல்லாத இடத்து மொத்த ரொக்கம் 3000/-
4. நற்சாட்சிப்பத்திரம்:- அண்மையில் கிடைத்த இரு நற்சாட்சிப்பத்திரங்கள்.
5. சம்பள விகிதம்:- 130 — 250 / 10 X 7 — 5X10
6. மேற்படி பதவிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் 25-9-70 பிற்பகல் 1-00 மணிக்கு முன் கௌரவ காரியதரிசிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பிக்க வேண்டும்.

முக்கிய கவனிப்பு:- விண்ணப்பகாரர்கள் 28-9-70 பிற்பகல் 3-00 மணிக்கு மேற்படி சங்கத்துக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் கொடுக்கும்படி கேட்கப்படுவதோடு பிறப்பு அத்தாட்சிப்பத்திரமும், மூல நற்சாட்சிப்பத்திரங்களுடனும் வரல்வேண்டும்.

ஊரெழு ப.நோ.கூ.சங்கம். த. அமிர்தலிங்கம்,
சுன்னாகம், 16-9-70. 2457 கௌரவ காரியதரிசி

LANGUAGE PRACTICE IN ENGLISH

By Mr. S Mahalingam, B A. (London)
Diploma in Education (Ceylon)
Retired Vice Principal, Jaffna Central collge.

The following series is designed to help the Students at the G. C. E. Ordinary Level to acquire the correct use of the English Language and it is prepared with the Department English courses for Grades 9 and 10.

1. Book 1 (based on Lesson Units 1 - 7 in An Englih Course for Grade 9 . 32 Lessons. Price 1-80.
2. Book II (based on Lesson Units 8 - 13) 32 Lessons Price 1 80.
3. Book III (based on Lesson Units 14 - 20) In print. Price 2-00.
4. Book IV (based on Lesson Units 1-10 in An English Course for Grade 10) 48 Lessons. In prepartion Price 3-00.

Available at Sri Lanka Book Depot, 234, K. K. S. Road, Jaffna.

2448

உத்தரவாதமுள்ள தங்க - வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எஸ். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னாதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமாண்டோக்கள் விடுதலைக்கு இஸ்ரேல் எதிர்ப்பு

பிரயாணிகளை விடுவிப்பதில் செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

ரெவ்அவிவ், செப், 16

"திசைதிருப்பிக்கொண்டு போன விமானப் பிரயாணிகள் எந்தநாட்டைச்சேர்ந்தவர்கள் எந்தமதத்தைச் சேர்ந்தவர்கள் என்றபாகுபாடில்லாமல் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு. இபான் இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் கூறினார்.

இஸ்ரேலிலும் இதரஇடங்களிலும் சிறைவைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்கள் விடுதலை செய்யப்பட்டால் தான் பிணைவைக்கப்பட்டுள்ள விமானப் பிரயாணிகள் விடுதலை செய்யப்படுவார்களென்ற நிபந்தனைக்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், இந்நிபந்தனையின் மீது அரபுக் கொமாண்டோக்களை விடுதலை செய்வதை இஸ்ரேல் எதிர்க்கிறதென்றும் திரு. இபான் கூறினார்.

இதே சமயம் அம்மானில் பிணையில் வைக்கப்பட்டுள்ள விமானப் பிரயாணிகளை விடுவிப்பது சம்பந்தமாக அரபுக்கொமாண்டோக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு இரண்டு தனித்தனி விசேஷ பிரதிநிதிகள் குழுக்கள் ஜெனிவாவிலிருந்து அம்மான் வந்து சேர்ந்துள்ளன.

நிக்ஸன் வெளிநாடு செல்வார்

வாஷிங்டன், செப் 16

அமெரிக்க அதிபர் நிக்ஸன் இம்மாதக் கடைசியில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்கு விஜயம் செய்யவிருக்கிறார். இம்மாதம் 27-ம் திகதி வாஷிங்டனிலிருந்து புறப்படும் அதிபர் நிக்ஸன் இத்தாலி, ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார். இத்தாலிக்குச் செல்லும்பொழுது வத்திக்கானுக்கும் சென்று பாப்பரசரைச் சந்திப்பார். பிரான்ஸ், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கும் அவர் செல்லக்கூடுமென்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திசை திருப்பும் முயற்சி தோல்வி

வாஷிங்டன் செப் 16

அமெரிக்க விமானம்ஒன்று உள்நாட்டுப் பிரயாணத்திலீடுபட்டிருந்த சமயம்அதை வடகொரியாவுக்குத் திசை திருப்ப முயன்ற இளைஞர் ஒருவர் அதே விமானத்தில் [illegible] 25,000 பௌண் விருப்பத்தைப்பெற விடுக்



கிரி ரஷ்யா செல்கிறார்

புதுடில்லி, செப் 16

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு வி. வி. கிரி இம்மாதம் 23-ம் திகதி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்கிறார். திருமதி கிரியும் அவருடன் செல்கிறார்.

விண் வெளியில் சதுரங்க விளையாட்டு

மாஸ்கோ, செப். 16

விண்வெளிக் கலங்களில் பிரயாணம் செய்பவர்களால் சதுரங்கம் விளையாட முடியும். இதற்கு விசேஷ ரக சதுரங்க விளையாட்டாளர்கள் தேவைப்படும். எடையின்மைநிலையில் அறையினுள் மிதந்து கொண்டிருப்பது பலபிரச்னைகளை உருவாக்கும்.

'ஸோயுஸ்-9' விண்கப்பலில் பிரயாணம் செய்தவர்கள் வசம் சதுரங்க பலகை ஒன்றிருந்தது. இது வெண்வெளி பயணத்திற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருந்தது.

இத்தகைய விண்வெளி சதுரங்கப் பலகைகள் விரைவில் விற்பனைக்குவரும்என்று 'பிராவ்தா' எழுதியுள்ளது. இவற்றை எவ்வித பயணத்தின் போதும் பயன்படுத்துவது இலகுவானதாக இருக்கும்

25,000 பேர் கண்தானம் செய்வர்

கோட்டை, புதன்

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்தான வாரத்தில் இலங்கை கண்தான சங்கம் இறந்தபின்னர் தங்கள் கண்களை தானம் செய்ய [illegible] 25,000 பேர் விருப்பத்தைப்பெற விடுக்

கம் மேலும் கூறியதாவது; 1956-ம் ஆண்டுவந்த ஐக்

அரசியல் சாஸன தமிழ் மகாநாடு

"குடியுரிமையற்ற மக்களுக்கும் அடிப்படை உரிமை வழங்கவும்"

— கோப்பாய் எம். பி.

'புதிதாகஎதனையும்நாம்கேட்கவில்லை'

— ஹண்டி

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், வியா'

பெற்றோர் விரும்பிய மொழியேபோதனாமொழியாக இருக்க வேண்டுமென்பது ஆபத்தானது. தங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் உத்தியோகம் பெறவேண்டுமென விரும்பும் தமிழ் பெற்றோர்கள் சிங்களத்தையே போதனாமொழியாக்குவார்கள். கொழும்பில் உள்ள தமிழ் பெற்றோர்களில் பலர் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தையே போதனாமொழியாக்கியுள்ளார்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்திலும் சில தமிழ்ப் பிள்ளைகள் சேர்ந்து சிங்களத்தைப் போதனாமொழியாக்கி கற்கின்றார்கள். இது எதிர்காலத்தில் தமிழினத்திற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடந்த அரசியல் சாசனம் பற்றிய தமிழ் மாநாட்டில் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் திரு அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது;

1956-ம் ஆண்டுவந்த ஐக்கிய இன்று இருக்கலாம். ஆனால் இந்நாட்டில் நாங்கள் பெரும்பான்மையினராக வாழும் ஒரு பகுதி உண்டு இந்தப் பிரச்னைக்கு அடிப்படைத்தீர்வு காணப்பட வேண்டும்.

குறைந்தபட்ச பாதுகாப்பு கொடுப்பதற்கு நாம் தடையாக நிற்கக்கூடாதென்பதற்காகவே, இதற்கு ஆதரவுதர முன்வந்தோம். ஒரு சட்டத்தை மற்றொரு சட்டம் மாற்றாது என்பதற்கு என்ன உறுதி? அடிப்படைசாஸனம் அரசியல் அமைப்பில் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டாலும் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால், இவற்றை திருத்துவதற்கும் வழிசெய்ய முயற்சிகள் செய்யப்பட்டுவருவதாக அறிகிறோம். அப்படி இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான்.

தலைவர் பேச்சு

தலைவர் திரு வி மாணிக்கவாசகர் கூறியதாவது: அரசியலின் முக்கிய கட்டத்தில் வாழ்கின்றோம். இந்த நிலையில் தமிழ்மக்கள் இங்கு கூடியது பொருத்தமானது. இலங்கையில் அரசியல் அமைப்புச்சட்டம் இயற்ற பேரவை கூட்டப்பட்டுள்ளது. இதில் தமிழ்மொழிபேறும் இடம் என்ன என்று நாம் ஆராய வேண்டும். எங்கள் முடிவை செயல்படுத்த நாம் முயல வேண்டும்.

நாம் மத மொழி பாகுபாடின்றி வாழ வேண்டும், அரசியல் துறையில் பாகுபாடற்ற நிலையில் வாழவேண்டும். நாங்கள் பலதடவை காட்டாததினால்தான் எங்கள் சமுதாயத்தில் ஐந்தாம் படையினர் தோன்றியிருக்கின்றனர். நான்கூட 5-ம் படையில் சேரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தமிழ அரசாங்க அதிபர் ஒருவர் நியமனம்செய்யப்படவிருந்தார். ஆனால் பௌத்த சிங்களவர் ஒருவர் அரசாங்க அதிபராக வந்திருப்பது ஏதனால் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். பௌத்த இயக்கம் வடபகுதியில் பரவிவருகிறது. 5 பௌத்த பாடசாலைகள் வடபகுதியில் உருவாகியிருப்பது கவலைக்குரியது. இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது?

சென்னை அசெம்பிளியில் 30 ஹரிஜனர் இடம் பெற்றுள்ளனர். ஆனால் இங்கு ஆட்சிமன்றத்தில் ஒருவர் மட்டுமே, இடம் பெற்றுள்ளார் இன்றுள்ள நிலையில் எங்களுக்கு கூடிய பிரதிநிதித்துவம் வேண்டும். பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை சிறுபான்மை தமிழ் பிள்ளைகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டில் ஹரிஜனர்களின் நலனைக் கவனிப்பதற்கு ஒரு மந்திரியே நியமிக்கப் பட்டிருக்கிறார். எங்கள் பிள்ளைகளின் கல்வியில் விசேஷசலுகை காட்டப்பட வேண்டும்.

திரு ஆர். என். சிவப்பிரகாசம் கூறியதாவது: அயல் நாட்டுபத்திரிகைகளை தடை செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். சைவசமயத்தில் மட்டும் பாகுபாட்டை ஒழித்தால் போதாது. இந்நாட்டிலுள்ள எல்லாச் சமயத்திலும் பாகுபாட்டை ஒழிக்க வேண்டும். ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் கோவில்களுக்கு பாகுபாடின்றி செல்ல வழிசெய்ய வேண்டும். சமூக ஏற்றத்தாழ்வு சைவசமயத்தில்மட்டுமில்லை. மற்றச்சமயங்களிலும் உண்டு. சாதிப் பிரச்னை வடக்கில் மட்டும் இல்லை, தெற்கிலும்உண்டு. ஆதலால் இந்நாட்டில்உள்ள சகல மக்களும் பாகுபாடின்றி நடத்தப்படவேண்டும்

செனட்டர் எஸ். நடராசா கூறியதாவது:- இந்நாட்டில் இரு இனங்கள் வாழ்கின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு இனமக்களும் பின் மற்ற இன மக்களும் ஜனாதிபதியாக வர வசதி செய்யப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்களும் ஜனாதிபதியாக இருக்க சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். 5 அல்லது 6 ராஜ்யம் இருந்தால்ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ரஜயத்தைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாக இருக்கலாம். இதன்மூலம் தமிழரும் ஜனாதிபதியாக வரும் வாய்ப்பு ஏற்படும்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசியதாவது: நாம் இந்த நாட்டில் தனி இனமாகவாழ வேண்டுமா? அல்லதுபெரும்பான்மை இன்த்தோடு கலந்து சிறு சிறு சலுகைகள் பெற்று வாழவேண்டுமா என்பதை நாம் சிந்திக்க

'பெரும்எதிர்ப்புகாட்டியிருந்தால் பிரச்னைகள் தீர்ந்திருக்கும்'

— அமிர்

'சைவசமய சபைகள்

பெரியபுராண அடிப்படையில் அமைய வேண்டும்'

மாவிட்டபுரம், புதன்

'சைவசமய சபைகள் பெரிய புராண அடிப்படையில் அமைய வேண்டியது, ஜனநாயகத்திற்கும் சமதர்மத்திற்கும் இக் காலத்திய பிரச்னைகளைத் தீர்ப்ப [illegible]

ஐ. நா. வெள்ளி விழாக் கூட்டம்

நியூயோர்க், செப் 16

சர்வதேசப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் ஐ நா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைவசமய சபைகள் பெரிய புராண அடிப்படையில் [illegible]மய வேண்டியது, ஜனநாயகத்திற்கும் சமதர்மத்திற்கும் இக் காலத்திய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் உதவுவதாகும். சைவப் பெரியார்களின் ஆலோசனையுடன் சமீபத்திலே கலாச்சார மந்திரி நியமித்துள்ள இந்த சமய ஆலோசனைச் சபை பெரிய புராண அடிப்படையில் அமைந்திருப்பது சைவசமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாகும். இச்சபையில் பிராமணர் உட்படப் பல்வேறு பிரிவினரும் இடம் பெற்றிருப்பது சமய குரவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலியோர் வகுத்த சைவ சமய நடைமுறைக்கு கொண்டு வருவதாகும்'.

இவ்வாறு வித்துவான் சைவப் புலவர் க.கணபதிப் பிள்ளை, வடகோவை இலுப்பையடி விநாயகர் ஆலயமின் விளக்கு ஏற்றல் வைபவத்தில் உரை யாற்றும் போது குறிப்பிட்டார்.

திரு வ. கந்தப் பிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்: பெரிய புராணத்தில் உள்ளதுபோல் மேற்படி சபையில் ஓர் பெண் அங்கத்தவராக திருமதி. வேதவல்லி கந்தையா அம்மையார் அங்கம் பெற்றிருப்பது அன்னார் சில மாதங்களுக்கு முன் இவ்வாலயத்தின் முன்றலில் நடைபெற்ற சபாபதி நாவலர் நினைவு விழாவில் பங்கு பற்றியதைச் சுட்டிக் காட்டி அப்போது பேச்சாளர்கள் சபாபதி நாவலர் பெயரில் ஒரு சங்கம் ஏற்படவேண்டுமெனக் குறிப்பிட்டதையும் அதன் பெறுபேறாக ஒரு சங்கம் ஏற்பட்டு அச்சங்கம் மின்னொளி ஏற்றல் விழாவை நடாத்துவதும் விநாயகர் பெருமானின் திருவருளை நினைப்பூட்டுவதாகு மெனக் கூறினார்.

திருமதி. வேதவல்லி உட்பட மற்றும் பலர் உரை யாற்றினர்.

— —

புதிய அங்கத்தவர்கள்

கோட்டை, புதன்

தபால் தந்தித் தொடர்பமைச்சர் திரு. குமாரசூரியர் தலைமையில் தமிழ் சஞ்சிகைகள் இறக்குமதி குறித்து ஆராய நிறுவப்பட்டுள்ள குழுவில் மேலும் சில புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர் அவ்வங்கத்தவர்கள் விபரம் வருமாறு:

புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, கலாநிதி. சு. வித்தியானந்தன், திரு. இராசிவலிங்கம், ஜனாப் எம். எம். உவைஸ், திரு கே. கணேஷ், திரு ஆ. வைத்தியலிங்கம்.

ஐ. நா. வெள்ளி விழாக் கூட்டம்

நியூயோர்க், செப் 16

சர்வதேசப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் ஐ. நா. ஸ்தாபனம் மேலும் முன்னேற்றமான வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஐ. நா, மகாசபையின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட நோர்வேயைச் சேர்ந்த திரு, எட்வார்ட் ஹம்ப்ரோ கூறினார்.

ஐ. நா. மகாசபையின் 25-வது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. இந்த வெள்ளிவிழாக் கூட்டத் தொடரில் 60 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கப்பூரில் 'வெண்சங்கு'

கோட்டை, புதன்

வெகு விரைவில் மீனாமூவிலின் 'வெண்சங்கு' சிங்கப்பூரில் திரையிடப்படவிருக்கின்றது' 'வெண்சங்கு' தமிழ் திரைப்படத் தயாரிப்பாளரான திரு. டபிள்யு. எம். தம்புவுடன் சிங்கப்பூரில் உள்ள தியேட்டர் அதிபர்கள் தொடர்பு கொண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்பு இலாகாவை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

— —

கொள்ளைக்கூட்டத்தினர்

50,000 ரூபா கொள்ளையடித்தனர்

கோட்டை, புதன்

கடந்தவாரம் ஒரு கொள்ளைக்கூட்டத்தினர் 50.000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துள்ளனர்.

இரத்தினபுரியில் பாணந்துறை வீதியில் மேற்படி கொள்ளைக் கூட்டத்தினர் ராக்ஸி ஒன்றை மறித்து அதன் சாரதியை தள்ளி விழுத்திவிட்டு அந்த டாக்ஸியைச் செலுத்திக்கொண்டு போய்விட்டதாகக் கூறப்படுகிறது, வெலோபிட்டியா தோட்டத்தைச் சேர்ந்த திரு. எம். டி. செய்சாவுக்குச் சொந்தமான இந்த ராக்ஸியின் பெறுமதி 25,000 ரூபா எனக் கூறப்படுகிறது. நீர்கொழும்புப் பகுதியிலும் கொள்ளைக்கூட்டம் ஒரு வீடொன்றில் புகுந்து 25,000 ரூபா பெறுமதியான நகைகளைக் கடந்த வியாழக்கிழமையன்று திருடிக்கொண்டு சென்றுள்ளதாம்.

இவை சம்பந்தமாக இதுவரை எவரையும் கைது செய்யவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வாஷிங்டன் செப் 16

அமெரிக்க விமானம்ஒன்று உள்நாட்டுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த சமயம்அதை வடகொரியாவுக்குத் திசைதிருப்ப முயன்ற இளைஞர் ஒருவர் அதே விமானத்தில் சொந்த அலுவலாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்த பாதுகாப்பு அதிகாரியினால் சுடப்பட்டுக் காயமடைந்தார் விமானம்சான் பிரான்சிஸ்கோவில் பாதுகாப்பாக இறக்கப்பட்டது.

— —

அழகு வள்ளியப்பா 25 வருட சேவை

சென்னை, செப் 16

குழந்தைகள் கவிஞர் திரு அழ. வள்ளியப்பாவின் 25 வருடசேவையைப்பாராட்டு முகமாக வருகிற நவம்பர் மாதம் பாரட்டு விழா ஒன்றுநடைபெறவிருக்கிறது

இவ்விழாவை ஒழுங்கு செய்ய திரு. ஏ. வி. மெய்யப்பச்செட்டியார் (ஏவிஎம் அதிபர்) தலைமையில் திரு. என் டி. சுந்தரவடிவேலு, திரு. கி. வா. ஜகந்நாதன் திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி, திரு. ஏ எஸ். பி: அண்ணாமலை. திரு. பெ. தூரன், திரு. செ. மெ. பழனியப்பன், திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோரைக் கொண்ட குழுஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் திரு. அழ. வள்ளியப்பாவின் குழந்தைஇலக்கியம் பற்றிய கட்டுரைகள் கொண்ட சிறப்புமலர் வெளியிடப்படும்.

— —

பல்கலைக்கழக விசாரணை குழு

அறிக்கையை கையளித்தது

கோட்டை, புதன்

பல்கலைக்கழக ஒழுங்கீனங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன்மாமூத்திடம் சமர்ப்பித்துள்ளது. டாக்டர் டபிள்யூ ராசபுத்திரம் தலைமையிலான இக் குழுவில் திரு எம். டபிள்யூ. கருணானந்தா, திரு பி. ஏ. வீரசூரியா, திரு. சந்திரா குணசேகரா ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

— —

பரீட்சையில் மாற்றம்

கோட்டை, புதன்

இவ்வருடம் நடைபெறவிருக்கும் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு மற்றுமொரு பரீட்சையும் நடைபெறவுள்ளது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்தான வாரத்தில் இலங்கை கண்தான சங்கம் இறந்தபின்னர் தங்கள் கண்களைத் தானம் செய்வதற்கு 25,000 பேரின் விருப்பத்தைப்பெற விருக்கிறது.

உலகிலேயே கண்களைத் தானம் செய்வதற்குப் பதிந்தவர்கள் தொகைஇலங்கையிலேயே அதிகமாகும். ஏற்கனவே 622 கண்கள் 21 நாடுகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி கண்தான வாரம் செப்ட்டம்பர் 20ம் தேதியிலிருந்து 26-ம் தேதிவரை நடைபெறவிருக்கிறது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதர் இலங்கை சர்வதேச கண் வங்கிக்கு ரோயல் காமன்வெல்த் சங்கத்தினால் அளிக்கப்பட்ட கண்கள் பெயர்த்தெடுக்கும் உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

.....

"விரைவில் சோஷலிஸ சமுதாயம்"

தாவடி, புதன்

"இலங்கை விரைவில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கும் என்பது உறுதி"

இவ்வாறு ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் லங்கா சமசமாஜ வாலிபர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து நடாத்திய கூட்டத்தில் கலந்துரையாற்றிய மக்கள் வங்கித் தலைவர் திரு. கெக்டர் அபயவர்த்தனா கூறினார்.

.....

கிராமசபை கவனிக்கும்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் சத்தியக் காட்டு சந்தை அடுத்த ஆண்டு தொடக்கம் குத்தகைக்கு கொடுக்கப்பட மாட்டாது. சந்தை வரிவசூலிப்பதை கிராமசபையே கவனிக்கும் தனிப்பட்ட நபருக்கு குத்தகை கொடுப்பதை நிறுத்துமாறு சுழிபுரத்தைச்சேர்ந்த பலர் மகஜர் மூலம் வேண்டியிருந்தனர். இதனைத் தொடர்ந்து கிராமசபையினர் குத்தகை கொடுப்பதில்லையெனவும் தீர்மானித்துள்ளர்.

.....

புதிய பாடசாலை

வல்வெட்டித்துறை, புதன்

வல்வை கிழக்குப்பகுதியில் அரசாங்கத்தினாலும் தனிப்பட்டவர்களாலும் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருந்துவரும் பாடசாலைக் கட்டிடம் இவ்வருடத்துக்குள் முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்படவிருக்கிறது.

பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் திரு அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது;

1956-ம் ஆண்டுவந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழர்களை கொலை செய்ய முயற்சித்தது. 70-ம் ஆண்டு வந்த தேசிய அரசாங்கம் தமிழர்களை தற்கொலை செய்யும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

இந்த நாட்டில் இன்று நாம் அடைந்திருக்கும் நிலைக்கு காரணம் என்ன என்பதை சிந்திக்க வேண்டும். இன்றைய அரசாங்கத்தின் போக்கு இந் நாட்டில் ஒரே இனம் ஒரேமதம், ஒரே சமுதாயம் இருக்கவேண்டுமென்பதே. அதை சட்டமூலமும் மயக்குவார்த்தை மூலமும் செய்துவிட முயற்சிக்கிறது.

அடிப்படை உரிமை சாசனம் அரசியலமைப்பில் சேர்க்கப்படவேண்டும் என்பதையும் நீதி மன்றத்தினால் அது செயல் படுத்தப்படவேண்டுமென்பதையும் நாம் ஆதரிக்கின்றோம். எங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னை பாரதூரமானது. சட்டமூலம் அளிக்கப்படும் பாதுகாப்பு போதுமானதா என்பதை நாங்கள் ஆழ்காகச் சிந்திக்கவேண்டும். இலங்கை அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு 29-ம் சரத்தில் இருக்கிறது ஆனால் நடைமுறையில் கடந்த 22 வருடமாக நாம்அனுபவித்துவந்த உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு வந்துள்ளன.

மலைநாட்டு மக்களின் குடி உரிமைபறிக்கப்பட்டபோது நீதிமன்றத்தின் உதவியை நாடினோம் மாவட்டநீதிமன்றம் சாதகமாக தீர்ப்பளித்த போதிலும் உயர்நீதிமன்றம் பாதகமாக தீர்ப்பளித்து பாதுகாப்பு அளிக்கத்தவறியது. சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து நாம் நீதிமன்றத்தின் உதவியை நாடினோம். மாவட்ட நீதிமன்றம் சார்பாக தீர்ப்பளித்தபோதிலும், உயர் நீதிமன்றம் பாதகமாக தீர்ப்பளித்தது. இந்த நேரத்தில் சட்டப் பாதுகாப்பை பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இன்று இலங்கை அரசியல் அமைப்பு என்று கூறி சட்டத்தையும் வழிவகைகளையும் புறணிக்கத்து புதிய வழியை அரசாங்கம் கையாண்டு வருகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் பெரும்பான்மை ஆதரவை பெற்றிருக்கும் நாம் எமது கருத்தையும் தெரிவிக்க விருக்கிறோம். முதலில் அடிப்படைத்தீர்வு காணப்படவேண்டும். ஆட்சி அமைப்பில் சிங்களவர்கள் இந்நாட்டில் பெரும்பான்மையினவேண்டும். எங்கள் முடிவை செயல்படுத்த நாம் முயலவேண்டும்.

நாம் மத மொழி பாகுபாடின்றி வாழவேண்டும், அரசியல் துறையில் பாகுபாடற்ற நிலையில் வாழவேண்டும். நாங்கள் பலதடவை கூடி இதுபற்றி ஆராய்ந்திருக்கிறோம். இங்கு தமிழரசுக் கட்சியினரும் வந்திருக்கின்றார்கள். நாம் ஒரே கருத்தை பேரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். தமிழ் மக்கள் என்றும்தமிழ் மக்களாக இந் நாட்டில் வாழவேண்டும். தமிழ் கலை கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டும். பாகுபாடின்றி தமிழர்கள் நடாத்தப்பட வேண்டும்.

இடதுசாரிப் போக்கு

திரு ஹண்டி பேரின்பநாயகம் கூறியதாவது:

சிங்களவர் தமிழர் ஒற்றுமை இருக்க வேண்டும். தமிழ்மொழி பாதுகாக்கப்படவேண்டும் என்பதே என் நீண்டநாள் விருப்பமாகும். என் அரசியல் போக்குஇடதுசாரிப் போக்கு, பலதடவை கட்சியில் சேரும்படி என்னை இடதுசாரிகள் வற்புறுத்தினார்கள். ஆனால் நான் சேரவில்லை. இனிமேல் சேர்ப்பார்களோ தெரியாது.

இந் நாட்டில் இன்னும் தமிழர்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள். ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் நாடுகளில் சிறுபான்மையினரின் மொழிக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்குமிடையில் உள்ள நாடொன்றில் 35.000 மக்களின் தாய்மொழி பிரஞ்சு மொழி நீதிமன்றங்களில் ஆங்கிலமும் பிரஞ்சும் இடம் பெற்றுள்ளன. கனடா, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து பின்லாந்து போன்ற நாடுகளிலும் சிறுபான்பையினருக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு அவர்களின் மொழி பேணப்பட்டு வருகிறது. நாம்புதிதாக எதனையும் கேட்கவில்லை. சிங்கள மக்களுக்கு விரோதமானதை நாம் கேட்கவில்லை.

திரு. ஏ. எம். செல்லத்துரை கூறியதாவது: மகாத்மாகாந்தி பெரும் பிரச்னையெனக்கருதிய தீண்டாமை பிரச்னையை தமிழ் தலைவர்கள் பெரிதாகக்கருதவில்லை. எங்கள் கல்வியை வளர்க்க ஒன்றும் செய்யப்படவில்லை. 1930-ம் ஆண்டுக்கு முன்னர் இங்குள்ள பாடசாலைகளில் சிறுபான்மை தமிழர்களின் பிள்ளைகளுக்கு இடமில்லை. அதனாலேயே அவர்கள் இன்றும் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். தமிழ் தலைவர்கள் நம் பிள்ளைகள் பற்றி அக்கறைகப் பட்டிருக்கிறார். எங்கள் பிள்ளைகளின் கல்வியில் விசேஷசலுகை காட்டப்படவேண்டும்.

திரு ஆர். என். சிவப்பிரகாசம் கூறியதாவது: அயல் நாட்டுபத்திரிகைகளை தடை செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் இலக்கிய ரசிப்புச் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும். கலை, கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

மத வழிபாட்டு சுதந்திரமும் சேர்க்கப்பட வேண்டும் என்று சென்டர் எஸ். நடராசா கூறினார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை கூறியதாவது:- எதிர்காலத்தில் சாதியில்லாத சமுதாயமாக இருக்க வழிசெய்யவேண்டும். சாதி ஒழிப்பதற்கும், சலுகைகள் கொடுப்பதற்கும் முரண்பாடு இல்லை. வியாதியை ஒழிப்பது எப்படி? வியாதி இருப்பதை ஏற்று அதனை ஒழிக்கிறோம். சாதி இல்லாத ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும்.

அட்வக்கேட் ஆர். ஆர். தங்கராசா கூறியதாவது:- திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசியதாவது: நாம் இந்த நாட்டில் தனி இனமாக வாழவேண்டுமா? அல்லதுபெரும்பான்மை இன்த்தோடு கலந்து சிறு சிறு சலுகைகள் பெற்று வாழவேண்டுமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தனி இனமாக நாம் வாழவேண்டுமென்றால் அதற்கு வழி என்ன? இவ்வளவு காலமும் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் சிறிய அளவில் எதிர்ப்புக்காட்டி வந்ததால்தான் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. மற்றும் நாடுகளிலுள்ள சிறுபான்மை மக்களைப்போல் நாமும் பெரும் எதிர்ப்புக் காட்டியிருந்தால் பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருக்கும்.

அட்வகேட் எஸ். ஆர். கனகநாயகம் கூறியதாவது:

ஹரிஜன பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் தமிழ் தலைவர்கள் அக்கறைகாட்டவில்லை என்பது தவறான கருத்தாகும் திரு. இரசரத்தினம் பாடசாலைகளில் ஹரிஜன பிள்ளைகளுக்கும் இடமளித்தார். இதன்மூலம் அவர் சட்டசபை தேர்தலில்தோல்வியுற்றாலும் தொடர்ந்து பல பாடசாலைகளில் பாகுபாட்டைஒழித்தார். இராமநாதன் கல்லூரியில் திரு. நடேசபிள்ளைகளுக்கும் இடவசதியளித்தார். இதேபோல் மற்றும் தலைவர்களும் சிறுபான்மை மக்களின்முன்னேற்றத்திற்காக பலவழிகளாலும் பாடுபட்டார்கள். சிறு

(4-ம் பக்கம் பார்க்க)

அடிக்கு ரூ. 15-00

வீதத்திற்குமேல் சேமியுங்கள்

உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.

தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.

நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—

1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர் பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அழுக்க வேலைகளுக்கும் ஆகான சக்தி உள்ள வேலைகளுக்கும் நேர்த்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.

தபால் பெட்டி நிர். 352, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிவாக்கு

மற்றவரைவிட தாம் மேலானவர் என்று எண்ணுவது ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் எதிராக இழைக்கும் பாவமாகும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 48, Jaffna: Telephone: 389.

வாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் திகதி (17-9-70)

தனி இனம்

"சிறுபான்மைத் தமிழரை இலங்கையில் ஒரு தனி இனமாகப் பிரகடனப் படுத்தவேண்டும்" என்று சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமனப் பிரதிநிதியுமான திரு. எம். ஸி சுப்பிரமணியம் அரசமைப்பு விவகார அமைச்சரிடம் சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரில் வலியுறுத்தவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் சாதிப் பாகுபாட்டையும் இன வேறுபாடுகளையும் ஒழித்து கட்டி உண்மையான தசிய ஒருமைப் பாட்டை உருவாக்க வேண்டுமென அழைத்து வருபவர்களுக்கு இது கவலையளிப்பதாகவே இருக்கும்.

சாதிப் பாகுபாட்டை ஒழிக்கும் நோக்கத்துடன் ஹரிஜனர்களுக்குப் பல சலுகைகளை வழங்கியதுடன் அவர்களுக்கு ஆட்சிமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் தனித் தொகுதிகளும் இந்திய நாட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சலுகைகளும் தனித்தொகுதி முறைகளும் சாதிப் பிரச்னையை நீடிக்கவே உதவி வந்திருக்கின்றனவென்பது அங்கு பலருடைய அபிப்பிராயமாகும்.

சிறுபான்மைத் தமிழர் பிரச்னைகளுக்கு தீர்வுகாண முன்னேய தலைவர்கள் தவறிவிட்டார்களென்று திரு. சுப்பிரமணியம் குறை சொல்வதில் நியாயமிருக்கலாம். ஆனால் இப்போது வளர்ந்துவரும் சமுதாயத்தில் சாதிப் பிரச்னை மறைந்து வருகிறது; மறைந்துவரத் தான் வேண்டும். இந்த நம்பிக்கையில்லையெனில் இனமதவேறுபாடற்ற உண்மையான சோஷலிஸக் குடியரசு ஒன்றை உருவாக்குவதில் நமது நாடு ஈடுபட முடியுமா?

சிங்களவர், தமிழர், சோனகர், இஸ்லாமியர், பறங்கியர் என்று மட்டுமல்லாமல் நாடற்றவர், பதிவுப் பிரஜைகள் என்று புதிதாக வேறு இனங்களும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் சிறுபான்மைத் தமிழரும் தனி இனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டால் சிறுபான்மைத் தமிழரிலும் உள்ள உட்பிரிவுகளும் தனி இனக் கோரிக்கையை எழுப்பினால் இங்கு தேசிய ஒருமைப் பாட்டையோ பாகுபாடற்ற சமுதாயத்தையோ எப்படித் தான் அமைக்கமுடியும்?

சாதிப்பாகுபாடு ஒழிக்கப்படவேண்டும். இனமத ஒற்றுமை ஏற்படவேண்டும், உண்மையான சமத்துவமும் தேசிய ஐக்கியமும் உருவாக்கப்படவேண்டும். இதற்கு சாதி இன, மொழி அடிப்படையிலுள்ள ஸ்தாபனங்களையே கலைத்துவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் சாதி அடிப்படையில் ஒரு புதிய இனத்தை உருவாக்குவது யாருக்கும் நன்மையளிக்காது; நாட்டுக்கும் நன்மையளிக்காது என்பதே பொதுவான கருத்து. இது சிந்திக்கவேண்டிய விஷயம்.

கீரிமலைச் சுரங்கம்

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலையில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கற்பாறைகளை வெடிவைத்துத் தகர்க்கையில் ஒரு சுரங்கப் பாதையைக் கண்டு பிடித்துள்ளனர். இச் சுரங்கப் பாதை பற்றிப் பலரும் பலவாறு கூறுகின்றனர். இந்த நாட்டில் வாழும் இரு பெரும் சமூகங்களுக்குத் தனிப்பட்ட கலை, கலாசாரங்களும் வரலாறுகளும் உள்ளன. இரு பெரும் சமூகங்களுக்கிடையிலும் இருந்து வந்த உறவுகளையும் தொடர்புகளையும் பற்றி சரித்திர நூல்கள் எடுத்துக் கூறினாலும் இந்த பண்புள் எல்லாம் எம்

இன்று அமரர் 'வன்னியர்' நினைவு தினம்

தமிழர் வாழ்வே தம் வாழ்வென வாழ்ந்தவர்!

அவர் பணி காலவெள்ளத்தால் என்றும் அழியாதது!!

உலகத்தில் எத்தனையோ பேர் தோன்றி மறைந்தும் அவர்கள் அனைவரும் நாம் நினைவிற் கொள்வது இல்லை. நினைவில் வைக்க முடிவது இல்லை. ஏன் நினைவில் வைக்க விரும்புவதும் இல்லை. காரணம் அது தேவையற்ற வீண்முயற்சி ஆனால் உலகில் ஒரு சிலர் மட்டும் எம் நெஞ்சை விட்டு அகல மறுப்பதற்குக் காரணம் தனக்கென்றே வாழ்ந்து வெறும் பிணமாக மாறாது தான் என்ற நினைப்பு ஒழிந்து பிறருக்காக தன் தசை உடலைத் தந்ததினால் இறை நிலையினை எய்தி விட்டனர். அவர்கள் தன் உடலை தான் தேய்த்து மணந்து நிற்கும் தனல் குளிக்கும் அகிற் கட்டை நிலையை ஒத்தவர்கள். இத்தகைய குறிப்பிடத்தக்க ஒரு சிலரான்றோர் வரிசையில் தனக்கென தனியிடம் பெற்றுவிளங்குபவர் தான் மறைந்தும் மறையாத எம் வன்னியசிங்கம் அவர்கள். அவர் இவ்வுலகில் வாழ்ந்தது 48 ஆண்டுகள் தான் அவரின் அரசியல் வாழ்வு 12 ஆண்டுகளைத் தாண்டவில்லை. ஆனால் இந்த 12 ஆண்டுகள் அவர் தமிழ் பேசும் இனத்திற்கு ஆற்றிய பணி கால வெள்ளத்தில் அமிழ்ந்து அழியாது காலம் பல கடந்தும் மக்கள் உள்ளத்நில் நிலைத்து நிற்கும் சாலச்சிறப்புடைய பணியாகும்.

இன்று வன்னியசிங்கம் மறைந்து 11 ஆண்டுகள் ஆகின்றன. ஆண்டுகள் பல உருண்டோடியும் அவர் நினைவு ஏன் எம் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்திருக்கிறது. அவர் ஒரு புகழ் பூத்த குடும்பத்தில் தோன்றினார். என்பதினாலேயா அல்லது அவர் ஒரு பட்டதாரி என்பதினாலேயா இல்லை இல்லை. அவர் ஒடு சிறந்த வழக்குரைஞர் ஆழ்ந்த தமிழ்ப் புலமையுடையவர். சிந்தனைத் தெளிவு மிக்கவர். நகைச்சுவையோடு நல்லபல கருத்துக்களை நல்கும் பேச்சாளர் இப்படிப்பல காரணங்களை பலர் கூறக்கூடும் இப் பண்புள் எல்லாம் எம்



கும் போது அவர் ஈழ வாழ் தமிழ் பேசும் மக்களின் வாழ்விற்கு ஆற்றிய தியாகம் தான் எம் உள்ளத்தை உருக்குகிறது.

ஓயாது உழைத்தவர்

நாயினும் நரி தமிழ் மக்கள் நலிவதை யான் கண்டும் ஓயுதல் இன்றி அவர் நலம் பேணி உழைத்திடயான் தவறேன். என்று புரட்சிப் புலவன் பாரதிதாசன் பாடினான். அந்தப் பாடலை வெறும் பாடலாகக்கருதாது அந்தப் பாடல் வகுத்த இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாய் இலங்கினார். வன்னியசிங்கம் அவர்கள் காலம் கடந்து செல்லச் செல்ல தான் அவரின் அளப்பரிய பெருமை தெரியவருகிறது. இரவு பகலாக தமிழ் பேசும் இனத்தின் நிலைத்த நல்வாழ்வைப் பற்றிச் சிந்தித்து வடக்கு கிழக்கு மலை நாடு என்று துடிப்போடு ஓடோடி தொண்டாற்றிய இப்பெருமகன் போன்ற ஒரு தமிழ்த்தலைவன் இனித் தான் ஈழமண்ணில் தோன்ற வேண்டும்.

குறிக்கோள் வீரன்

உடம்பிலே எலும்பே இல்லாத உயர்மேகத்திற்கு நன்செய் இடமெல்லாம் மழையைப் பெய்யும் இலட்சியம் அல்லது குறிக்கேகள் உண்டு. ஆனால் உடம்பிலே எலும்பைப் பெற்றும் ஓடிடும் குருதி பெற்றும் இடமான கொள்கையின்றித் திரியும் மனிதர் பலர் உண்டு இவர்கள் இடுகாட்டில் சேர்ந்த பின்னர் இருக்கின்ற தசை நரம்பும் சுடுதியில் மண்ணாய் போய்விடும். இப்பேருண்மையை உணர்ந்தாவது ஒரு குறிக்கோளுடன் வாழ எத்தனை பேர் எத்தனிக்கின்றனர். ஆனால் இந்நிலைக்கு புறநடையாக குறிக்கோளோடு கொள்கையெனும் குன்றேறி நின்ற இம்மாமனிதன் திரு வன்னியசிங்கம் அவர்கள் தான் கொண்ட கொள்கைக்காக தன் உயிரைத் துறப்பதையே வரவேற்றார். 1957-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவரின் இனிய குரல் உள்ளக்குமுறல் பின் முழுக்கு ஒத்த உரிமை வழங்க வேண்டுமெனக் கேட்பது நாடடுத்துரோகம் என்றால் எமது மரபு வழித் தாய கத்தின் அரசியல் பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இழுக்கப் போராடுவது நாட்டிற்குத் துரோகம் என்றால்...

இந்நாட்டையே தங்கள் தாயகமாகக் கொண்டு அதன் வடுவாயின் நாற்றுக்கு அறுபது சதவீதத்தை நல்கும் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை வாக்குரிமைக்காகப் போராடுவது நாட்டிற்குச் செய்யும் துரோகமென்றால்..... இதே தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலைமையைப்போக்கப்போராடுவது நாட்டிற்கு விளைவிக்கும் துரோகமென்றால்...

"ஈழவேந்தன்"

இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பிரித்து அதே வேளையில் நாட்டைப் பிளக்காது ஒரு அரசியல் அமைப்பிற்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமென்றால்...

இத்தனை தேசத்துரோகங்களையும் கூட்டாக நிறைவேற்றி அதன் விளைவுகளை மகிழ்ச்சியோடு நுகர்வேனேயன்றி எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழிந்துப் பழிக்கப்பட்டு சிதைந்து சீரழிந்து காலப் போக்கில் அழிவதைப் பொறுக்கமாட்டேன். இனத்தின் உரிமைக்காக போர் தொடுப்பதால் தேசத் துரோகியென்று குற்றஞ் சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்க விடப்படுவதையே நான் வரவேற்கிறேன்" என்றார்.

தன்னை ஒறுத்தவர்

தன்னை ஒறுத்து வெறுத்து தமிழ்பேசும் இனத்தின் வாழ்வே தன் வாழ்வென வாழ்ந்தவர்தான் வன்னியசிங்கம் அவர்கள். இப் பெருமகனின் மறைவை எண்ணும்போது இந்தியாவின் அமைதியின்மையின் தந்தை என்று எடுத்துரைக்கப்பட்ட உலோகமனிதன் மானிய திலகர் மறைந்த போது மனிதருள் பேராற்றல் உள்ள மனிதன் மறைந்து விட்டான், சிங்கத்தின் கர்ச்சனை ஓய்ந்து விட்டது உலோகமானிய திலகர் இனிமேல் இல்லை என்று காந்தி அடிகள் கதறினார் நாமும் அவரின் உரையை சிறிது மாற்றி மனிதருள் பேராற்றல் படைத் மாமனிதன் மறைந்துவிட்டான் தமிழ்ச்சிங்கத்தின் வீரகர்ச்சனை ஓய்ந்து விட்டது. என்தை சுதறுவதைத்தவி, வேறு வழியில் திடம் படைத்த கல்நெஞ்சும் திடுக்கிட்டு நடுநடுங்கிச் சிதறிப் போக மடம்படைத்த மாபாவி இயமன் எம் இதயத்தில் ஒளிவிட்ட எம் வாழ்வின் வழிகாட்டியை பறித்துச் சென்று விட்டான் எம் உடம்பெல்லாம் வயயாகமாறி உள்ள குழைந்து ஓ என்று கதறி அழுதாலும் அந்த அன்பின் திருவுருவத்தை அறிவின் ஒளிச்சுடரை! தமிழ் உடைதரித்து உள்ளும் புறமும் தமிழனாய் வாழ்ந்த எளிமையின் தோற்றத்தை—கண்ணுக்கு இனியான யாம் இனிக் காணப்போவதில்லை ஆனால் அவரின் நினைவு நன்றி மறவாத தமிழ் மக்களின் உள்ளத்தினின்று என்றென்றும் நீங்காது...!

300 படித்த வாலிபர்கள் பூநகரியில் குடியேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரிப் பகுதியில் கிராஞ்சி என்ற இடத்தில் சுமார் 300 படித்த வாலிபர்களுக்கு அரசாங்கம் காணி வழங்கியுள்ளது. பல இளைஞர்கள் கிராஞ்சியில் காணி பெற விண்ணப்பம் செய்து கொண்டார்கள் முன்னரே அப்பகுதியில் 1500 பேர்களுக்கு முந்திரிகை, கறுவா, தென்னை முதலிய பயிர்களைச் செய்யக் காணிகொடுக்கப்பட்டுள்ளது.

படித்த வாலிபர்கள் பல்வேறு விதமான விவசாய அபிவிருத்தியில் ஈடுபடும் நோக்கமாக இத்திட்டம் காணி அமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ளது:

யாழ்ப்பாணம் மாவட்ட காணி அதிபர் திரு பொன் முந்திரிகைச் சாகுபடிசெய்யத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் அவசரவேண்டுகோளின்படி சகல காணிகளுக்கும் பிரதான பாதை அரசாங்கத்தால் வெட்டப்பட்டுள்ளது.

நில அளவை இலாகா மேற்படி படித்த வாலிபர்களது திட்டத்துக்குரிய காணியை அளந்து கட்டை அடித்து பொறுப்பதிகாரிகளிடம் கையளித்துள்ளது.

மண்வளமும், நீர்வளமும் உள்ள பூநகரி நாகபடுவான், முளங்காவில். கரியபடுவான், பொன்னுவெளி, வேரவில், கிராஞ்சி ஆகிய இடங்களுக்கு குடியேற்ற மக்களையும், மத்திய வகுப்புத் திட்டத்தவரையும் தெரிவுசெய்தபடியால் மிக

குடியுரிமை ...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

பான்மைப் பிள்ளைகளுக்கு விசேஷ சலுகைகள் அளிக்கப்படவேண்டும்.

கொடிகாமம் கோலை வழக்கு

மட்டுவில், புதன்

கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கு இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டது. பஸ் கண்டக்டர் சங்கரப்பிள்ளை கனகசபை என்பவர் சாட்சியமளித்தார். இம் மாதம் 30-ம் திகதிக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

— —

இலங்கை வருகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

மைசூர் பட்டினத்தின் ரம்பாபுரி ஜகத்குரு ஸ்ரீமத் சிரேணுக வீரகெங்கால சிவாசாரிய மஹா சுவாமிகள் பெப்ரவரி முற்பகுதியில் இலங்கைவருகிறார்.

கீரிமலை ரம்பாபுரி இரேணுகமாச்சிரமத்தில் வீரசைவமக்களால் நடாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்ர்கள் கற்பாறைகளை வெடிவைத்துத் தகர்க்கையில் ஒரு சுரங்கப் பாதையைக் கண்டு பிடித்துள்ளனர். இச் சுரங்கப் பாதை பற்றிப் பலரும் பலவிதமாக கூறுகின்றனர். தின்மும் பலர் இந்தச் சுரங்கப் பாதையைப் பார்வையிடச் சென்று திரும்புகின்றனர். சுரங்க பாதையை ஆராய்ந்தால் நமது நாட்டின் பழைய வரலாறு, கலாச்சாரம் பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கக் கூடுமென்றும் இதுபற்றி ஆராய்வதற்கு புதை பொருளாராய்ச்சிப் பகுதியினருக்கு உத்தரவிடுமாறும் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் கலாச்சார விவகார அமைச்சரைக் கடிதமூலம் கேட்டிருந்தார். இதுவரை இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல நமது நாட்டிலுண்டு. புதைபொருளாராய்ச்சியின் மூலம் நமது புராதனகலை, கலாசாரங்களையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ள முடியும். காங்கேசன்துறை, மாவிட்டபுரம் கீரிமலை ஆகிய இடங்கள் பற்றி கர்ண பரம்பரைக் கதைகள் பலவுண்டு. சரித்திர வரலாறுகளும் நிறைய விருக்கின்றன. ஆயினும் இதற்கு ஆதார பூர்வமான சான்றுகள் குறைவு.

தமிழ் மன்னர்களின் ராஜதானியாக விளங்கிய நல்லூரில் சங்கிலித் தோப்பு போன்ற இடங்களில் புதைபொருளாராய்ச்சி நடாத்தப்பட வேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கை. யாழ்ப்பாண மாநகரசபையில் இக்கோரிக்கை ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதும் உண்டு.

கீரிமலைச் சுரங்கம் சிலர் கூறுவது போல தரைக் கீழ்த்தாரையாகவும் இருக்கலாம். ஆனாலும் நல்லூர் சங்கிலித் தோப்புப்பற்றி இதுவரை ஆராய்ச்சி செய்யாமல் கடத்தப்பட்டு வந்திருப்பதுடன் தரைக்கீழ்த்தாரை என்று கீரிமலைச் சுரங்கத்தை சொல்வதை ஒப்பு நோக்கும் போது இதுவும் தட்டிக் கழிக்கும் ஒரு முயற்சியென்றே வடபகுதி மக்கள் கருதக் கூடும்.

கலாசாரங்களும் வரலாறுகளும் உள்ளன. இருபெரும் சமூகங்களுக்கிடையிலும் இருந்து வந்த உறவுகளையும் தொடர்புகளையும் பற்றி சரித்திர நூல்கள் எடுத்துக் கூறினாலும் அவற்றுக்கு புதைபொருளாராய்ச்சி மூலம் சரியான ஆதாரங்களைப் பெறமுடியும். இந்தவகையில் கந்தரோடையுடன் கீரிமலைச் சுரங்கத்தையும் ஆராய்வது பயன்தருவதாக இருக்கும்.

தமிழ்ப் புலமையுடையவர், சிந்தனைத் தெளிவு மிக்கவர், நகைச்சுவையோடு நல்லபல கருத்துக்களை நல்கும் பேச்சாளர் இப்படிப்பல காரணங்களை பலர் கூறக்கூடும் இப் பண்புகள் எல்லாம் எம்மைக் கவர்ந்த உண்மைதான். இத்தகைய பல்துறை ஆற்றல் படைத்த அறிஞர்கள் தமிழகத்தில் அல்லது பாரதத்திலும் தோன்றி உள்ளார்கள். தோன்றவும் கூடும் ஆனால் இன்று வன்னியசிங்கம் அவர்களை நினைக்கும் தோறும் கொண்ட கொள்கைக்காக தன் உயிரைத் துறப்பதையே வரவேற்றார். 1957-ல் நடைபெற்ற நாடாளுமன்றச் சொற்போரில் அவரின் இலட்சியக் குரல் உள்ளக்குமுறல் பின்வரும் முறையில் வழிந்தோடியது. இதோ அவர் பேசட்டும்.

"ஒருவன் தன் மொழியுரிமைக்காகப் போராடுவது அதே வேளையில் மற்றவரின் மொழிக்கு கேடு பயக்காது சிங்களத்தோடு செந்தமிழ் மொழியல்லாத ஏனைய மொழிகளிலுமுள்ள வெளிநாட்டுச் சஞ்சிகைகளையும் பரிசோதித்துத் தடை விதிப்பதென தீர்மானித்திருந்தால் அரசாங்கத்தினரின் நன்னோக்கம் வெளிப்படையாகவிருக்கும்.

'மக்களின் அடிப்படை உரிமையில் தலையிட்டு அலட்சியம்செய்கிறது'

யாழ். பெற்றோர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

"இந்தியத் தமிழ் சஞ்சிகைகள் எவற்றையேனும் தடைசெய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பது மக்களின் அடிப்படை உரிமையொன்றில் தலையிட்டு அலட்சியம் செய்வதாயுள்ளது" என்று யாழ். பெற்றோர் சங்கத்தின் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானம் மேலும் கூறுவதாவது:-

"சில இந்திய தமிழ்ச்சஞ்சிகைகள் இலங்கைக்குவராதபடி தடைசெய்ய எமது அரசு உத்தேசித்திருப்பது மக்கள் நமது அறிவையும், சிந்தனைகளையும் எவ்வழியாகவும் பெற்றுவரும் உரிமையை நிராகரிப்பதுமல்லாமல் அகில உலக மனித உரிமைச் சாசனத்தின் பத்தொன்பதாவது ஷரத்தையும் பாதிக்கிறது".

மனித அடிப்படை உரிமையை சுரத்துப் பின்வருமாறு விபரிக்கின்றது. "ஒவ்வொருவனும் அபிப்பிராயம் கொள்ளவும், தனது உள்ளக் கிடக்கையை விபரிக்கவும் சுதந்திரமுண்டு. இச் சுதந்திரம் எவ்வித தலையீடுமின்றி அவன் அபிப்பிராயம்கொள்ளவும், எந்த வரம்புமின்றி எவ்வழியிலும் தனது அறிவையும், கருத்துக்களையும் தேடி அடைந்து அவைகளை மற்றவர்களுக்கு உபகரிப்பதையும் உள்ளடக்கியிருக்கிறது."

சில இந்தியத் தமிழ்ச் சஞ்சிகைகள் கீழ்த்தரமானவையென பொதுப்படையாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது இன்னும் தெளிவாகவில்லை. என்னென்ன சஞ்சிகைகள் தரம்குறைந்தவை? இவைகளைத் தரம் பிரித்துச் சொல்பவர்கள் யார்? வெளிநாட்டுச் சஞ்சிகைகள் இங்கு வராமல் தடைசெய்தால் உள்நாட்டு எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு அவர்களின் வெளியீடுகளின் தரம் உயரும் என்பது சிந்தனையற்ற கருத்தாகும் எப்பாஷையிலுமுள்ள வெளிநாட்டுச் சஞ்சிகைகள் மூலமாக எமக்குக் கிடைக்கும் கருத்துக்கள் உள்நாட்டு வெளியீடுகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்த உதவும் என்பதே உண்மை. வெளிநாட்டுச் சஞ்சிகைகளில் குற்றம் காண்பதற்கு முன்னர் நம்நாட்டு வெளியீடுகளில் குற்றம் கண்டு தரத்தை உயர்த்துவதுதான் நாரீகம். வள்ளுவர் பெருமானும் கூறுகின்றார்,

"ஏதிலார் குற்றம் போற்றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு"

ஆதலினால், இந்தியத் தமிழ்ச்சஞ்சிகைகளில் எவற்றையேனும் தடைசெய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பது புத்தியீனமானது. ஜனநாயகத்துக்கு விரோதமானதும், மக்களின் அடிப்படை யுரிமை ஒன்றில் தலையிட்டு அலட்சியம் செய்வதாயுமுள்ளதென யாழ். பெற்றோர் சங்கம் கருதுகிறது. இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்பு வாய்ந்த விதமாக, விவேகத்துடன் நடந்து கொள்ளுமென இச்சங்கம் நம்புகிறது.

சங்கீத ரத்தினங்கள்!

தாவடி, புதன்

இராமநாதன் இசைக் கல்லூரி 1969-ம் ஆண்டு இறுதிப்பரீட்சை "சங்கீதரத்தினம்" பட்டம் பெறும், மாணவிகள் விபரம் பின்வருமாறு:-

வாய்ப்பாட்டு

முதலாம் பிரிவு:- செல்வி உ. சவுந்தரவல்லி, செல்வி தி. பத்மினி.

இரண்டாம் பிரிவு:- செல்வி. பி. அமராவதி, செல்வி. வி. கருணாமலர், செல்வி. க. சுசிலாதேவி, செல்வி. வே. மங்கையர்க்கரசி.

வயலின்

முதலாம் பிரிவு:- செல்வி. ந. சுசிலாதேவி, செல்வி. தி. பிரேமாவதி

இரண்டாம் பிரிவு:- செல்வி. க. விஜயலட்சுமி,

மிருதங்கம்

செல்வன் எம். சிதம்பரநாதன் (இரண்டாம் பிரிவு) செல்வன் ம. இரவிச்சந்திரன் (இரண்டாம் பிரிவு) செல்வன் எஸ். நவரத்தினம் சாதாரண சித்தி)

வீணை

செல்வி பே. திவ்வியரஞ்சனி (இரண்டாம்பிரிவு)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

இப் பத்திரிகை—"சுழநாடி" விநியோக ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நீலன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படித்த வாலிபர்கள் பல வேறு விதமான விவசாய அபிவிருத்தியில் ஈடுபடும் நோக்கமாக இத்திட்டம் காணி அமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ளது:

யாழ்ப்பாணம் மாவட்ட காணி அதிபரி திருபொன்னம்பலம் காணிக்கு விண்ணப்பித்தவர்களை தெரிவு செய்து குடியேற்றுவதற்கு ஒழுங்குசெய்துள்ளார்.

உள்ள பூநகரி. நாகபடுவான், முளங்காவில். கரியபடுவான், பொன்னாவெளி, வேரவில், கிராஞ்சி ஆகிய இடங்களுக்கு குடியேற்றமக்களையும், மத்திய வகுப்புத் திட்டத்தவரையும் தெரிவுசெய்தபடியால் மிகவும் பாராட்டக்கூடியதாக அவர்கள் காணிகளை அபிவிருத்தி செய்துள்ளதாக அதிகாரி கூறினார். (குவிம)

குறைந்த செலவில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள்

கோட்டை, புதன்

மகா வித்தியாலயங்களில் குறைந்த செலவில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை நிறுவுவதற்குக் கல்வி யமைச்சு தீர்மானித்துள்ளது. கிராமப் புறங்களில் விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிப்பதற்காகவே அமைச்சு இந்த நடவடிக்கையையெடுக்க விருக்கிறது.

பாடசாலைக் கட்டிடங்களுக்கான ஆசிய ஆராய்ச்சி நிறுவனம் மேற்படி ஆய்வு கூடங்களை அமைக்கும் முறையை திட்டமிடவுள்ளது. இந்த ஆய்வுகூடங்கள் ஒவ்வொன்றும் 2500 ரூபா செலவில் நிறுவப்பட்டு 15,000 ரூபா பெறுமதியான உபகரணங்களைப் பெற்று அமையும்.

கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் தொழில் நுட்பக் கல்வி மசோதாவை ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்த பின்னரே மேற்படி ஆய்வு கூடங்கள் நிறுவப்படவுள்ளன. அநேகமாக அடுத்தாண்டு முற்பகுதியில் இவைகள் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர்பாராட்டு!

கோட்டை, புதன்

"இலங்கை வல்லரசுகளோடு சேராது சுதந்திரமான நடுநிலைமைக் கொள்கையை அனுசரிப்பது வரவேற்கத் தக்கதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதுமாகும். இலங்கையின் இக்கொள்கை பிரான்சின் கொள்கையோடு ஒத்ததாக அமைந்திருப்பதும் உலக சமாதானத்துக்கு ஒத்துழைப்பு நல்குவதை இரண்டும் ஒருமுகமாக வரவேற்கிறதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்'

நேற்று பிரான்ஸில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவுக்கும்பிரான்ஸிய வெளிவிவகார அமைச்சர் திரு. ஷீமனுக்கும் இடையில்நடைபெற்றபேச்சுவார்த்தையின் போது திரு ஷீமன் மேற்கண்டவாறு இலங்கையின் கூட்டுச்சேர நிலைமையைப் பாராட்டிக் கூறினார்.

பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சருக்கும் பிரதமர் சிறிமாவுக்கும் இடையில் இரு மணித்தியாலங்கள் நடைபெற்ற உரையாடலில் இலங்கை-பிரான்ஸ் வர்த்தக ஒத்துழைப்பு இலங்கையிலுள்ளபெற்றோலியம் நிறுவனம், இலங்கை பிரான்ஸ் புதிய விமானப் போக்கு வரத்துபோன்ற பலவிடயங்கள் இடம்பெற்றன,

பேச்சுவார்த்தையின் பின்னர் வெளிவிவகார அமைச்சரால் தனக்களிக்கப்பட்ட மதிய போசனத்தின்போது பிரதமர் சிறிமா 'நான் பிரான்ஸிற்கு விஜயம் செய்ததையிட்டு மிகமகிழ்ச்சியடைகிறேன். நான் உங்களோடு நடத்திய பேச்சுவார்த்தை எனக்கு ஊக்கமளிப்பதாகவும் திருப்திகரமாகவும் அமைந்திருக்கிறது. இது நமது இரு நாடுகளுக்கிடையேயும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வலுப்படுத்தும் அத்துடன் பரஸ்பர ஒத்துழைப்பும் வலுப்பெறும் எனக் குறிப்பிட்டார்,

திருமதி சிறிமா பிரான்சிய வெளிவிவகார அமைச்சர் இருவரது உரையாடலின்போது பாரிஸ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் பிரதமரின் மகள் சந்திரிகா உடன் இருந்து மொழி பெயர்ப்பு வேலையைக் கவனித்தார்,

பிரபல பிரான்ஸிய பத்திரிகையான 'லேபொண்ட்' திருமதி பண்டாரநாயக்காவின் விஜயத்தையும் இலங்கையின் கொள்கையையும் பாராட்டி ஆசிரிய தலையங்கத்தில் எழுதியுள்ளது.

திரு வி. என். நவரத்தினம்: இந்த மகாநாட்டில் அரசியல் அமைப்புக்கான எல்லா விஷயங்களும் இடம் பெறவில்லை. சில விஷயங்கள் விடப்பட்டிருக்கிறது. அரசியல் அதிகாரம் எங்கே இருக்கிறது என்பதை அறியவேண்டும். அரசியல் அதிகாரம் பிரதமரிடம் இருந்தால் குடியரசுத் தலைவராக யார் தெரிவு செய்யப்பட்டாலும் ஒன்றுதான்.

திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை: இந்த அரசாங்கம் சமயப் போர்வையற்ற அரசாங்கமாக இருக்க வேண்டுமா அல்லது ஏதாவது ஒரு சமய அரசாங்கமாக இருக்க வேண்டுமா? இம் முக்கிய விஷயம் பற்றி ஆலோசிக்க வேண்டும். குடியுரிமை இல்லாத 10 லட்சம், சிறுபான்மைமக்களுக்கும், அடிப்படை உரிமை வழங்கப்படவேண்டும்.

இம்மகாநாட்டில்சுமார்60 பேர்கலந்து கொண்டனர், மகாநாடு நிகழ்ச்சிகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சி எம். பிக்களான திரு எஸ் ஜே வி செல்வநாயகம், திரு கே ஜெயக்கொடி, திரு வி தர்மலிங்கம், திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை, செனட்டர் எஸ்நடராசா. தமிழ் காங்கிரஸ் எம் பிக்களான திரு

சி அருளம்பலம், திரு வி ஆனந்தசங்கரி, தமிரசு பொதுச் செயலாளர் திரு ஏ அமிர்தலிங்கம், தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம் சிவசிதம்பரம், யூ என் பியை சேர்ந்த கற்குடா எம் பி திரு டி டபிள்யூ தேவநாயகம், மட்டக்களப்பு மேயர் திரு எஸ் திஸவீரசிங்கி

வேலைநிறுத்தம்

கொழும்பு வியாழன்

நாலாயிரம் தோட்டத் தொழிலாளர் நேற்று அடையாள வேலைநிறுத்தம் செய்தனர், பதுளையிலுள்ள கீனுகலை தோட்டத்தில் நடந்த பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆட்சேபம் தெரிவித்தே இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது; தோட்டத்திலிருந்து பொலிசார் வெளியேற்றப்படவேண்டும் என்றும் தொழிலாளர் கோரினார்கள்.

— —

கோரிக்கை

சுழிபுரம், புதன்

மாதகலில் சங்கமித்த ஞாபகார்த்த கலாச்சார மண்டபம் கட்ட கலாச்சார அமைச்சிடம் பத்தாயிரம் ரூபாய் வழங்குமாறுகோடும் ஒரு மகஜரை மாதகல்கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர். மாதகல் இறங்குதுறையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தைநினைவு கூர சங்கமித்த ஞாபக கலாச்சார மண்டபம் அமைவதன் அவசியத்தைமகஜரில் விளக்கியுள்ளனர்.

முன்னாள் மாவட்ட நீதிபதிகளான திரு எஸ் தனபால சிங்கம், திரு எஸ் தம்பித்துரை, திரு வி எம் குமாரசாமி, முன்னாள் பேராசிரியர் திரு கே நேசையா. டாக்டர் விரி பசுபதி திரு ஹண்டி பேரின்பநாயகம், ஹட்டன் வழக்கறிஞர் ரி கே என் திலகன், பதுளை வழக்கறிஞர் கே வி நடராசா, திரு எஸ் சூரசங்காரம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தபால் மந்திரி திரு செ குமாரசூரியர், முதலியார் சின்னத்தம்பி, முன்னாள் நீதியரசர் சிவசுப்பிரமணியம், மட்டக்களப்பைச் சேர்ந்த திரு கே கணபதிப்பிள்ளை ஆகியோர் தந்தி மூலம் மகாநாட்டிற்கு செய்திகள் அனுப்பியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org